தமிழ் எழுத்தும் ஏடும்
கோபாலையர் தி.வே

# தமிழ் எழுத்தும் ஏடும்

தஞ்சாவூர்ச் சட்டப்பேரவை உறுப்பினர்
எஸ்.என்.எம். உபயதுல்லா அவர்களின்
**அறக்கட்டளைச் சொற்பொழிவு**
**1**

28.4.89

சொற்பொழிவாளர்
**அறிஞர் தி.வே.கோபாலையர்**
தமிழ்த்துறைத் தலைவர்
பிரஞ்சு இந்தியக் கலைக்கழகம், புதுவை.

**ஓலைச்சுவடித்துறை**
**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**

ISBN: 81-7090-161-8

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 128
திருவள்ளுவர் ஆண்டு 2021 மாசி - மார்ச்சு 1990

| | |
|---|---|
| நூல் | தமிழ் எழுத்தும் ஏடும் |
| ஆசிரியர் | தி.வே.கோபாலையர் |
| விலை | உரு. 7.50 |
| பதிப்பு | முதற்பதிப்பு |
| அச்சு | தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர். |

# தமிழ் எழுத்தும் ஏடும்

வையம் ஈன்றதொன் மக்கள் உளத்தினைக்
கையி னால்உரை காலம் இரிந்திடப்
பைய நாவை அசைத்த பழந்தமிழ்
ஐயை தாள்தலைக் கொண்டு வணங்குவாம்.

## உலகமும் உயிரும்

இவ்வுலகம் ஐம்பெரும் பூதங்களின் செயற்கைப் பொருளாகும்.

'நிலம்தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்' -பொருள். 644

என்பது தொல்காப்பியம். எனவே, ஐம்பெரும் பூதங்களைக் கொண்டு இவ்வுலகை ஆக்கிய பெரிய சக்தி ஒன்று உண்மைத் தேற்றம். இவ்வுலகப் பொருள்களை உயிருடைய பொருள், உயிர்இல்லாத பொருள் என்ற இரு கூறுகளாகப் பகுக்கலாம். உயிருடைய பொருள்கள் ஓரறிவுயிர் முதலாக ஆறறிவுயிர் ஈறாக ஆறு வகையாகச் சான்றோர் பகுப்பர்.

பூதம் ஒவ்வொன்றற்கும் ஒவ்வொரு பண்பு உண்டு. நிலத்தின் பண்பு மணம்; நீரின் பண்பு சுவை; தீயின் பண்பு ஒளி; காற்றின் பண்பு ஊறு என்னும் தொடு உணர்ச்சி; விசும்பின் பண்பு ஒலி. ஒவ்வொன்றனையும் உணர உயிர்ப் பொருள்களிடம் பொறிகள் உள்ளன. மணத்தை உணர மூக்கும் சுவையை உணர நாவும் ஒளியை உணரக் கண்களும் தொடு உணர்ச்சியை உணரத் தோலும் ஒலியை உணரக் காதுகளும் படைக்கப்பட்டுள்ளன.

தொடு உணர்ச்சியை மட்டும் உணரும் உயிர் ஓரறிவுயிர்; அவை புல்லும் மரனும் போல்வன. தொடு உணர்ச்சியோடு நாவால் நுகரப்படும் சுவையையும் உணருவன ஈரறிவுயிர்; அவை நந்து, முரல் போல்வன. தொடுஉணர்ச்சி, நா உணர்வு, மூக்கின் முகரும் உணர்வு என்ற மூன்றும் உடையன மூவறியிர்; அவை சிதல், எறும்பு போல்வன. ஒன்று தாக்கியவழியன்றி அறியாமையின் இவற்றிற்குக் கண் உணர்வு இல்லை; உறப்பியவழி ஓடாமையின் இவற்றிற்குச் செவி உணர்வும் இல்லை. நண்டு, தும்பி என்பன தொடு உணர்ச்சி, நாவுணர்வு,

மூக்குணர்வு இவற்றோடு கண் உணர்வும் உடையன. தொடு உணர்வு, நாவுணர்வு, மூக்குணர்வு, கண் உணர்வு இவற்றோடு செவியறிவும் உடையன ஐயறிவுயிர்கள். இவைகள் மாவும் மாக்களும் ஆகும். இவற்றோடு மன உணர்வும் உடையவர்களே ஆறறிவுடையவர்களாகிய மக்களாவர். உலகப் படைப்புகளில் மன உணர்வு உடைய மக்களே மேம்பட்டவர். தொடு உணர்ச்சியை மனிதனைக்காட்டிலும் ஈரறிவுயிர்களாகிய புழுக்கள்கூட மிகுதியாகப்பெற்றுள்ளன. நாவுணர்ச்சியைக் கருங்குரங்கு மிகுதியாகப் பெற்றுள்ளது. மூக்குணர்வினை மூவறிவுயிராகிய எறும்பும் மனிதனைவிட மிகுதியாகப் பெற்றுள்ளதைக் காண்கிறோம். மனிதனைவிட மிகுதியாகக் கண் உணர்வுடைய கழுகு, மீன்கொத்தி முதலிய ஐயறிவுயிர்களைக் காணலாம். மக்களைவிடச் செவியுணர்வு மிகுதியாக உடையன மான் முதலிய ஐயறிவினாகிய விலங்குகளும் பாம்பு முதலிய ஊர்வனவும் ஆகும். எனவே, ஏனைய பொறி உணர்வுகளால் மற்ற உயிரினங்களிலும் தாழ்நிலையிலுள்ள மனிதனுடைய குறைகளைஎல்லாம் போக்கி, அவனை அவ்வுயிர்கள் யாவற்றிலும் மேம்பட்டவனாகச் செய்யும் ஆற்றலுடையது மனஉணர்வாகும்.

**மனிதனின்மாட்சி:**

மன உணர்வு ஏனைய யானை, குரங்கு முதலிய விலங்கினங்களுக்கும் ஒரோ வழிச் சிறிதளவு இருப்பினும் மன உணர்வை நிரம்பப் பெற்றவன் மனிதனேயாவான். மன உணர்வு நன்கு அமையப்பெறாத மக்களை ஐயறிவுடைய மாக்கள் என்றே நச்சினார்க்கினியர் விளக்கிச் சொல்வர். கைகளைக் கொண்டு தொழிற்படும் உயிர்கள் யானை, குரங்கு, மனிதன் என்ற மூன்றுமே ஆதலின் யானையும் குரங்கும் விலங்கினங்களில் மேம்பட்டன ஆகின்றன.

'தக்க இன்ன தகாதன இன்னஎன்று
ஒக்க உன்னல ராயின் உயர்ந்துள
மக்களும் விலங்கே' (4054)

என்பது இராமாவதாரம்.

பிண்டம் உண்ணும் பெருங்களிற்றையோ, வைக்கோலை நிரம்ப உண்ணும் பெற்றத்தினையோ நாம் வாயுடைய பிராணி

என்று கூறுவதில்லை. அவற்றை எல்லாம் வாயில்லாப் பிராணிகள் என்றே கூறுகிறோம். அவற்றின்வாய் மனிதனைப்போல் உணவு உண்பதற்கும் ஒலி எழுப்புவதற்கும் பயன்படுதலைக் காண்கிறோம். அவை ஒலி எழுப்புதலைப் பிளிறுதல், உறுமுதல், கனைத்தல், ஊளையிடல், கரைதல், அகவுதல் என்றாற்போன்ற பல தனிப்பட்ட சொற்களால் குறிப்பிடுகிறோம். எனினும் அவற்றை வாயில்லாப் பிராணிகள் என்றே கூறுகிறோம். தத்தம் மனத்தில் உள்ள கருத்துகளைச் சொற்கள் வாயிலாக வெளியிடும் ஆற்றலுடைய மக்கள் இனமே வாயுடைய பிராணி என்று கணக்கிடப்படுகிறது. செவிடு, குருடு, நொண்டி, முடம் என்பன மக்களினத்துக்கும் விலங்கினத்துக்கும் பொதுவாக அமைந்துள்ளன. ஆனால் ஊமை என்பது மக்கள் இனத்திடை மட்டும் காணப்படுவது ஒன்றாகும். எனவே குருடு, செவிடு, நொண்டி, முடம் போல்வன பொதுப்பெயராகவும் ஊமை என்பது உயர்திணைப் பெயராகவும் ஆதலை உணர்கிறோம்.

## மொழியின் தோற்றம்

மக்களை விலங்குகளினின்றும் பிரித்துச் சிறப்பாக நோக்குவதற்கு அடிப்படையான மன உணர்வின் காரியமாக ஏற்பட்டனவே மொழிகள். மொழிகள் மனிதனுடைய ஆக்கப்பொருள்களே எனினும் எல்லையிடமுடியாத ஓர் இயற்கைப் பெருஞ்சக்தியின் காரியமாகவே மனித இனங்களுக்கு மாத்திரம் உள்ளத்தில் உள்ளதனைத்தெள்ளிதின் புலப்படுத்த மொழி என்ற கருவி வாய்த்திருக்கிறது.

மனிதனைப்போல ஏனைய உயிரினங்களுக்கும் தத்தமக்குள் புலப்படுத்திக் கொள்ளும்வகையில் மொழிகள் உள்ளன என்பதும் அந்த ஏனைய உயிரினங்களின் மொழிகளையும் உணரும் தனி ஆற்றலுடைய மனிதர்களும் இருந்தனர் என்பதும் பண்டை நூல்கள் வாயிலாக அறியப்படுவனவாகும்.

'கார்கொண்ட கொடைகழறிற் றறிவார்க்கும் அடியேன்'.

என்று சுந்தரமூர்த்தி நாயனார் சேரமான்பெருமான் நாயனாரைக் கழறிற்று அறிவன் என்ற பெயராலேயே சுட்டியுள்ளார். அதே பெயர் கொண்டு அவரைக் குறிப்பிடும்

திருத்தொண்டர்புராணம், அச்சேரமான்பெருமாள் நாயனார் 'யாவும் யாரும் கழறினவும்' அறியும் ஆற்றலராகி இருந்த செய்தியை இயம்பும். நாயன்மார் அறுபத்துமூவருள் இத்தகைய தனி ஆற்றல் பெற்றிருந்த நாயனார் இவர் ஒருவரே.

வண்டுகளில் சிறந்த தும்பிக்குச் செவியறிவும் உண்டு என்று விளக்கிக் கூறுவர் நச்சினார்க்கினியர். சீவகசிந்தாமணி குணமாலையார் இலம்பகத்தில், சீவகன் வண்டுக்ளையும் சுரும்புகளையும் மிஞிறுகளையும் தும்பிகளையும் விளித்துத் தான் கொண்ட இருதிறச் சுண்ணங்களில் நல்ல சுண்ணத்தை உண்ணுமாறு கேட்டுக்கொண்டான் எனவும் அவ்வாறே அவை செயற்பட்டன எனவும் அறிகிறோம். அறிவியல் வளர்ச்சியில் இச்செய்திகளும் உண்மையே என்று நிறுவும் காலமும் வரலாம் என்று கருதுகிறோம்.

மனித இனத்தின் உடல் அமைப்பில் பொதுவாக ஆண் பெண் என்ற இருவகை வேறுபாடுகளையே காணலாம். ஆனால் சிறப்பாக நோக்கும்போது ஒருவருடைய முக அமைப்பினைப் போல மற்றவருடைய முகஅமைப்பு இருப்பதில்லை. ஒரு சிலர் அழகுடையவராகவும் ஒரு சிலர் அழகற்றவராகவும் இருத்தலைக் காண்கிறோம். அழகுடையவராகப் பிறப்பதும் சென்ற பிறப்பில் செய்த நல்வினைப்பயன் என்றே நம் முன்னோர் கருதினர்.

கருவி மாமழை கனைபெயல் பொழிந்தென வழிநாள்
அருவி போல்தொடர்ந்து அறாதன அரும்பிணி அழலுள்
கருவில் காய்த்திய கட்டளைப் படிமையின் பிழையா
உருவின் மிக்கதோர் உடம்பது பெறுதலும் அரிதே (2752)

என்பது சீவகசிந்தாமணி.

மக்கள் தாம்வாழும் இயற்கைச் சூழ்நிலைக்கேற்பவும் உடல்வேறுபாடு உடையவர் ஆதலைக் காண்கிறோம். உடல்வேறுபாடு போலவே நடையிலும் வேறுபாடு காணப்படுகிறது. இவை கண்கூடாகக் காணப்படுகின்றன. மனம் காட்டலாகாப் பொருளைச் சார்ந்தது. அம் மனநிலைக்கண் ஒருவர் மனநிலைக்கும் மற்றவர் மன நிலைக்குமிடையே வேறுபாடுகள் உள்ளன. ஒருவனுக்குச் சிரிப்பை உண்டாக்கும் செய்தி மற்றவனுக்கு அழுகையை

உண்டாக்கலாம். பாலைவனத்திலிருந்த ஆறலை கள்வர்கள் அவ்வழிப் போந்தவர்களிடமிருந்த செல்வங்களைக் கொள்ளையிட்டனர். கொள்ளையடிப்பதற்குப் பொருள் களோடு வாராதவர்களை வெட்டிவீழ்த்தினர். கள்வர்கள் தங்களால் வெட்டிவீழ்த்தப்பட்டவர்களின் உடல்கள் துள்ளுவதைப் பார்த்து மகிழ்ச்சி உற்றனர். அவர்களுடைய துயரக்காட்சி இவர்களுக்கு மகிழ்ச்சி தரும் பொருளாக அமைகிறது. இங்ஙனம் பிறருக்குத் துன்பம் செய்து மகிழ்பவர் ஒரு சாராராகப் பிறருக்குச் சிறு துன்பம் நேரினும் அதனைக் காணச் சகியாது கண்ணீர் வடித்து அதனைப் போக்க உதவிய அருளுள்ளம் படைத்தவர்களின் மனநிலை அதற்கு மறுதலைத்தாக அமைகிறது.

'கொள்ளும் பொருளிலர் ஆயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துஉயிர் வௌவலின்
புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆரிடை' (4)

என்பது கலித்தொகை.

தம்குறை தீர்வுஉள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர் (நன்னெறி-10)

என்பது நன்மக்கள் இயல்பு.

இங்ஙனமே பிறருடைய ஆக்கத்தைக்கண்டு வியத்த லோடு தம்முடைய குறைபாட்டைக் கண்டு வாழ்க்கையை அருவருக்கும் மனநிலையையும் காணலாம். ஒருவனுடைய வீரச்செயல், மற்றொருவனுக்கு அச்சம் விளைவிப்பதும் கண்கூடு. ஒருவனுடைய விருப்பம் ஈடேறாமை கொண்டு அவனுக்கு வெகுளி வருதலையும் உள்ளியது முடிக்கும் தெள்ளிய அறிவுடையவன் மகிழ்வோடு இருப்பதையும் காண்கிறோம்.

இன்பத்திலும் துன்பத்திலும் சிறிதும் சலிப்பின்றித் தம் கடமையை எந்நிலையிலும் தவறாது செய்துவரும் சாந்தவடிவினரோ அருகிக் காணப்படுகின்றனர்.

இவற்றையெல்லாம் நோக்க வெளிப்படையான உடல் வேறுபாட்டிலும் உள்ளார்ந்த மனவேறுபாட்டிலும் ஒருவருக்கு ஒருவர் ஒற்றுமையற்று நிற்கும் இயல்பு மனித இனத்திடையும் பரந்து இன்றும் காணப்படுகிறது. இந்நிலை மனிதஇனம் தோன்றிய காலத்திலிருந்தே நிகழ்வதுஒன்றாகும். மனிதஇனம் தோன்றிய காலத்திலே மனிதர்கள் தம் உள்ளத்துப்பட்ட செய்திகளைத் தம் கைகால்கள் அசைவுகளால் சில சைகைகள் காட்டி அவற்றின் உதவியாலே வெளிப்படுத்தியிருத்தல் கூடும். இந்நிலையில் ஆண்டில் மூத்தவர்கள் பின் பற்றும் சைகைகளை ஆண்டில் இளையாரும் அம் மூத்தவர்களைப் பின்பற்றித் தாமும் பயன்படுத்தி யிருக்கக்கூடும். மனநிலையை வெளிப்படுத்தத் தன்வாயி னின்று வெளிப்படுத்தும் ஒலியை மக்கள் இனம் இயற்கை யாகவே பயன்படுத்துகிறது. மகிழ்வில் தோன்றும் ஒலிக்கும் அழுகையில் தோன்றும் ஒலிக்கும் அச்சத்தில் தோன்றும் ஒலிக்கும் வியப்பில் தோன்றும் ஒலிக்கும் வெகுளியில் தோன்றும் ஒலிக்குமிடையே வேறுபாடு உள்ளமை இன்றும் உணரப்படுகிறது. இத்தகைய மனநிலையை விலங்கினங்கள் சிலவற்றிடையேயும் இன்றும் காணலாம். நம்மோடு பழகி நம் வீட்டில் வளரும் நாய்கள் அவ்வப்போது வெளிப்படுத்தும் ஒலி வேறுபாடுகளைக் கண்டு அவற்றின் மனநிலையை அறிகிறோம். இவையெல்லாம் மனிதன் தொடக்கக் காலத்தில் தன் கருத்தைப் புலப்படுத்தப் பின்பற்றிய கருவிகளாம். ஒவ்வொருவர் குரல்வளையில் இருந்து வெளிப்படும் ஒலியிடையேயும் சிறிது வேறுபாடு உண்டெனினும் இத்தகைய மெய்ப்பாடுகளை வெளிப்படுத்தும் வகையில் பலருடைய குரலிடையேயும் சிறிது ஒற்றுமை இருப்பதைக் காணலாம்.

இத்தகைய பொது ஒற்றுமையே பின்னர் மொழி தோன்றுதலுக்கு அடிப்படையாக அமைந்திருத்தல் கூடும்.

கதிரவனிலிருந்து தெறித்துவிழுந்து அனற்பிழம்பாக இருந்த உலக உருண்டையின் நடுப்பாகமே முதலில் குளிர்ந்திருக்கவேண்டும் எனவும் அவ்விடத்திலேயே முதலில் உயிரினங்கள் தோன்றியிருக்கக்கூடும் எனவும் முதல் மனித இனமும் அங்கேயே முதலில் ~~தோற்றம்~~ பெற்றிருத்தல்வேண்டும் எனவும் அம்மனித இனமே செய்கை வகைகளையும் குரல் ஒலிவகைகளையும் தன் மனக்கருத்தை வெளியிடப் பின்பற்றிய

பின்னர், மனக்கருத்தை வெளியிடச் செப்பமான கருவியாகிய மொழியைப் படைத்திருத்தல் வேண்டும் எனவும் அத்தகைய நடுநிலப்பரப்பு கடலில் முழுகிய குமரிக்கண்டமாகவே இருந்திருத்தல் வேண்டும் எனவும் அங்கேயே முதல் மொழி தோன்றியிருத்தல் வேண்டும் எனவும் அங்கிருந்தே மக்களினம் உலகின் பல பகுதிகளுக்கும் பரவியிருத்தல் வேண்டும் எனவும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

## மொழியின் வளர்ச்சி

மொழி என்பது ஒரு சில ஆண்டுகளில் உருவாக்கப் படுவதொன்றன்று. பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒருமனப்பட்டு ஒவ்வொரு பொருளை உணர்த்தவும் ஒவ்வோர் ஒலியை வரையறை செய்துகொண்டு அவ்வொலியையே அப்பொருளை உணர்த்தப் பல ஆண்டுகள் பயன்படுத்தியபின், அவ்வப்பொருளின் செயல்கள் பலவற்றையும் வெளியிட முறையாகப் பல ஒலிகளையும் பயன்படுத்தியிருத்தல் வேண்டும். பலரும் ஒற்றுமையாக ஒரேவித ஒலிகளை இவற்றிற்குப் பயன்படுத்தப் பல காலம் ஆகியிருத்தல் கூடும். பொதுவாகத் தனித்தனி மனநிலைகொண்ட மக்கள் பலரும் ஒருமனப்பட்டு ஒற்றுமையாக இவ்வொலிகளைப் படைக்கும் ஆற்றல் அவர்களுக்கு ஒரு மாபெருஞ் சக்தியினாலேயே ஏற்பட்டிருத்தல் வேண்டும். அம்மாபெருஞ்சக்தி மக்கள் இனத்திற்கு ஒருமனப்பட்டு ஒலிகளைப் படைக்கும் ஆற்றலை வழங்கிய செய்தியே மக்களினத்தை ஏனைய உயிர்களிலிருந்து வேறுபடுத்தி அதனை மேம்பட்டதாக்கியுள்ளது. இக்கருத்துப்பற்றியே மக்களினத்துக்கு இறைவனே மொழியைப் படைத்துக் கொடுத்தான் என்று நம் முன்னோர்கள் சுருக்கமாகக் குறிப்பிடுவாராயினர்.

'இருமொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவர்'
'ஆதிசிவன் படைத்துவிட்டான்'

என்பன போன்ற சான்றோர் கூற்றுகள் நோக்கத்தக்கன.

மொழிவளம் ஏற்பட்டுப் பல்லாயிரம் ஆண்டுகள் ஆயினபின்னரும் உறுப்புக்குறையான் ஊமையாய் இருப்பவர் செவியறிவும் அற்றிருத்தலின் அவர்கள் பிறர் உள்ளக் கிடக்கையைத் தம் கண்களினால் அறிந்து தம்

உள்ளக்கிடக்கையைத் தம் கைச்சைகைகளினால் தெரிவித்தலைக் காண்கிறோம்.

> கையி னால்சொலக் கண்களில் கேட்டிடும்
> மொய்கொள் சிந்தையின் மூங்கையும் ஆயினேம் (998)

என்பது சிந்தாமணி.

இன்றும் இரகசியமான செய்திகளைக் கண்களால் தெரிவித்தலையும் கண்களால் அறிதலையும் காணலாம்.

> இளையவன் தனைஅழைத்து இடுதி தீயென
> வளையொலி முன்கையாள் வாயின் கூறினாள்;
> உளைவுறு மனத்தவன் உலகம் யாவுக்கும்
> களைகணைத் தொழஅவன் கண்ணின் கூறினான்
> (இராமா-10029)

> 'பகைமையும் கேண்மையும் கண்உரைக்கும் கண்ணின்
> வகையை உணர்வார்ப் பெறின்' (குறள் 709)

என்பதும் அது. மொழி படைக்கப்படுவதன்முன் இத்தகைய செய்திகளை அறிதற்கண் பயன்படுத்தப்பட்ட மக்களின் கூர்ந்த அறிவு, மொழிவாயிலாகத் தம் கருத்தைப் புலப்படுத்தத் தொடங்கியபிறகு ஓரளவு மழுங்கிவிட்டது என்றே கருதவேண்டியுளது.

முதற்கண் மொழி பேச்சுவழக்காக எழுந்தகாலை முதலில் பொருளையும் பிறகு பொருளின் செயலையும் அடுத்து அதன் பண்பையும் குறிப்பிடத்தொடங்கியிருக்கலாம். ஒரு பொருளைக் குறிப்பிடுவதனால் மாத்திரம் மனத்திலுள்ள செய்தியை முழுமையாகக் குறிப்பிடமுடியாமையால் முதலில் மொழியின் பேச்சுவழக்குத் தொடர்மொழியாகவே தொடங்கியிருத்தல் வேண்டும் என்பது மொழிநூலார் கருத்து. மொழி பேச்சுவழக்காக எழுந்தகாலத்து எவ்வெவ்வாறெல்லாம் வடிவுற்றுப் பலவாறாகக் கிளைத்து மக்கள் உள்ளக் கருத்தினைப் புலப்படுத்தியது என்பது நம் கற்பனையால் பலவாறாக ஆராய்ச்சி செய்யத்தக்க ஒரு சுவையான செய்தி எனினும், அது முறையாக வளர்ந்து பரவிய செய்தியை

முறையாக வரையறுத்து உரைப்பது என்பது எளிய செய்தியன்று.

## வரிவடிவத் தோற்றம்

பல்லாண்டுகள் பேச்சுவழக்கில் மொழி பயின்ற பின்னரே அதற்கு வரிவடிவம் அமைந்திருத்தல் வேண்டும். முதல் வரிவடிவம் பொருளையும் அதன் செய்கையையும் குறிக்கும் சித்திரவடிவினதாக அமைந்திருக்கலாம். பிறகு ஒவ்வொரு சொல்லிலும் உள்ள ஒலிகளை ஆய்ந்து ஒப்பிட்டுப் பொதுவாக வழங்கும் ஒலிகளைத் தனித்தனியே கண்டு அவற்றிடை உள்ள வேறுபாடுகளைக் கூர்ந்துநோக்கி அவ்வொலிகளை எழுத்துகளின் கூட்டமாக அமைத்துச் சொல்லாக்க முறையை உண்டாக்கியிருக்கலாம். எழுத்துகளை வரையறுத்தபின்னரும் இன்ன எழுத்திற்குப்பின் இன்ன எழுத்தினை அமைத்து நெடுங்கணக்கினை உண்டாக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவதற்கும் அவ்வெண் ணத்தைச் செயற்படுத்துவதற்கும் பல நூற்றாண்டுகள் ஆகியிருக்கலாம்.

## நெடுங்கணக்கின் தோற்றம்

எவரோ சிலர், தாம் விரும்பியவாறு நெடுங்கணக்கினை அமைத்துவிட்டனர் என்று கூற இயலாது. பலரும் ஒருங்குகூடி ஒலிகள் தோன்றும் இடங்களை ஆராய்ந்து அவற்றை வரிசைப்படுத்தி முறையாக நெடுங்கணக்கினை அமைத் துள்ளனர். தொடக்கத்தில் படைக்கப்பட்ட தமிழ்மொழி போன்றவற்றில் மிக இன்றியமையாத ஒலிக்கூறுகளே நெடுங்கணக்கில் எழுத்துகளாகத் தொகுக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வோரொலியிலும் எடுத்தும் கனைத்தும் உரப்பியும் உண்டாக்கும் சிறுசிறு வேறுபாடுகளையும் அறியத் தனித்தனி எழுத்துகளை வரிவிடிவில் படைத்தல் என்பது சற்றுப் பிற்பட்ட காலத்தில்தான் ஏற்பட்டிருத்தல் வேண்டும். எடுத்தும் கனைத்தும் உரப்பியும் ஒலிக்கும் சிறு வேறுபாடுகளை விடுத்துச் சொற்களிடையே காணப்படும் அடிப்படை ஒலிகளை எழுத்து என்று பெயரிட்டு அவ்வெழுத்துகளைத் தொகுத்து ஒலிப்பதால் சொற்களைப் படைக்கும் நெறி மிகப் பண்டைய மொழியாகிய தமிழ்

மொழிக்கண் சிறப்பாக அமைந்திருத்தலை ஆராய்ச்சியாளர் குறிப்பிடுகின்றனர்.

தமிழ் மொழியில் ஒவ்வோரெழுத்திற்கும் ஒவ்வோரொலியுண்டு. இம்முறை ஒவ்வோரெழுத்திற்கும் இடம் நோக்கிப் பல ஒலிகளையும் ஓரொலிக்குப் பல எழுத்துகளையும் கொண்டு சில எழுத்துகளுக்கு ஒலித்தல் வாய்ப்பே இன்று என்று வரையறுத்துக் கூறும் மேல்நாட்டு மொழிகளை நோக்க தமிழ்மொழி மிகச் செப்பமுடையதாக அமைந்திருத்தலை உணரலாம். எழுத்தொலிகளை உணர்ந்த சிறுவர்கள் கூட எழுத்தொலிகளைக் கூட்டிச் சொற்களை எளிமையில் ஒலிக்கும் இம்முறை தமிழ்மொழியில் சிறப்பாகக் காணப்படுகிறது. இந்தி முதலிய வடஇந்திய மொழிகளிலும்கூடச் சொற்களிடையே உயிர்மெய் எழுத்துகளை மெய் எழுத்தாக ஒலிக்கும் சிக்கல் உள்ளது. தமிழில் தனித்தனி எழுத்தாக அமைந்திருக்கும் ஒலிகள் ஆரியமொழியில் கூட்டெழுத்து என்ற, 'ஸம்யுக்தாட்சரமாக' அமையும் சிக்கல் உள்ளது. அச்சிக்கல் இக்காலத்துச் சிறிது சிறிதாக நெகிழ்க்கப்பட்டு வருகிறது.

## தமிழ் ஒரு தனிமொழி

நெடுங்கணக்கு முறையில் ஓரளவு ஒற்றுமை இருப்பதனை உட்கொண்டு, சீர்திருத்தம் செய்யப்பட்டமொழி என்ற பொருளில் பெயரிடப்பட்டுள்ள வடமொழியிலிருந்து (வடமொழி) தமிழ் தோன்றியது என்று இடைக்காலச் சான்றோர் கொண்ட கொள்கை பொருத்தமானது அன்று என்பதனை மொழிநூல் அறிஞர் யாவரும் அறிவர். தத்தமுள் சிறிது வேறுபாடுடைய நால்வகை ஒலிகளை அமைப்பதற்குத் தொடக்கத்தில் ஒரே எழுத்தினையே கொண்டிருப்பர் என்பதும் பின்னரே ஒவ்வோரொலிக்கும் தனித்தனி எழுத்தினைப் படைத்துக் கொண்டிருப்பர் என்பதும் இயல்பான செய்திகளேயாம். சீர்திருத்தம் செய்யப்பட்டது ஒன்றனுக்குமுன் சீர்திருத்தம் செய்யப்படாததொன்று இருந்திருத்தல் வேண்டும் என்பதன்கண்ணும் ஐயத்துக்கு இடன் இன்று. எனவே, வடமொழி தோன்றுவதற்கு முன்பே மக்களால் படைக்கப்பட்ட மொழி தமிழாதல் தேற்றம்.

இன்றுள்ள போக்குவரத்து வசதிகள் பண்டைக்காலத்தில் இல்லை. எனவே குமரியிலிருந்து இமயம் செல்வதற்குப் பல

ஆண்டுகள்கூட ஆகியிருக்கலாம். இன்று சில மணி நேரத்தில் முடிக்கும் பயணம் பண்டு பல ஆண்டுகளைச் செலவிட்டது. பண்டு குமரியிலிருந்து இமயம்வரை பரவியிருந்த ஒரே இனமக்கள் தத்தமக்குள் போக்கு வரத்து அருகிய காலையில் தாம்தாம் பேசி வழங்கிய மொழிகளிடையே சிலசில வேறுபாடுகள் ஏற்பட அப் பேச்சுமொழிகளை ஒவ்வொரு பகுதியில் வாழ்ந்தவரும் தனித்தனிப் பெயரிட்டழைக்கத் தொடங்கினர்.

காலம் செல்லச்செல்ல அம் மொழிகளிடையே வேறுபாடுகளும் பல்குவன ஆயின. ஒருமொழி பேசியவர் கூறிய கூற்றுகளை வேற்றுமொழி பேசியவர் எளிதின் உணரும் வாய்ப்பு அருகுவதாயிற்று. எனவே, எல்லா மொழிகள் பேசுவோரும் எளிதின் உணரும் வகையில் எல்லாருக்கும் பொதுவான ஒரு மொழியைச் செப்பமாகப் படைத்துப் பயன்கொள்ளும் எண்ணம் மக்களிடையே இன்றியமை யாததாக ஏற்பட்டது. அக்காலத்துப் படைத்துக் கொள்ளப்பட்ட மொழியே சமசுகிருதம். அம்மொழியைப் படைத்தற்கண்ணும் அதனை வளர்த்தற்கண்ணும் இமயம்தொட்டுக் குமரிகாறும் வாழ்ந்த நன்மக்கள் அனைவருடைய பங்கும் இருந்தது. எனவே அம்மொழியை இப்பாரததேசத்தில் வாழ்ந்த அறிஞர் அனைவரும் கற்றனர்.

அறிஞர் குழாம் இப் பாரதகண்டத்தின் எந்தப் பகுதியில் கூடினும் அவர்கள் தத்தமக்குள் உரையாடுதற்குச் சமசுகிருதத்தையே பயன்படுத்தினர். நுட்பமான அறிவியற் செய்திகள் பலவும் பலராலும் பயிலப்படுதற்கு வாய்ப்பாக அவற்றை மக்கள் தத்தம் பேச்சுமொழியாகிய தாய்மொழிகளில் வரையாமல் சமசுகிருதமொழியிலேயே வரைந்து அம்மொழியை வளப்படுத்தினர். இதனால் சமசுகிருதமொழியில் பல்லாயிர நூல்கள் தோன்றலாயின. வடமொழி எந்தக் காலத்தும் யாருக்கும் தாய்மொழியாகவோ பொதுமக்களின் பேச்சுவழக்கு மொழியாகவோ இருந்த தில்லை. இமயம்தொட்டுக் குமரிகாறும் வாழ்ந்த மக்களுள் அறிஞர் பலரும் சமசுகிருதமும் கற்றவராகவே இருந்தனர்.

தமிழோடு பல்லாற்றாலும் ஒப்புமையுடைய மொழிகளைத் திராவிட மொழிகள் எனவும் வட நாட்டில்

வழங்கும் மொழிகள் பலவற்றையும் வடமொழிச்சார்புடைய வடஇந்திய மொழிகள் எனவும் மொழி நூலறிஞர் பாகுபடுத்து வழங்குவர். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு என்பன திருந்திய திராவிட மொழிகள் எனவும் துதம், கோதம், கோண்டு, குயி, ஓராவோன், இராசமகால், பிரகுயி என்பன திருந்தாத திராவிட மொழிகள் எனவும் அவர்கள் வழங்குவர். இம்மொழிகளிடையே காணப்படும் இலக்கண அமைப்பு ஒப்புமைகளில் பல, வடமொழிச் சார்புடையனவாகக் கூறப்படும் வடஇந்திய மொழிகளிடையே காணப்படுதல் ஒரு காலத்தில் பாரத தேசம் முழுதும் தமிழ்மொழி பரவியிருந்த பகுதியாக இருந்திருக்கலாம் என்று கருதுதற்கு வாய்ப்பளிக்கிறது.

## தமிழ் நெடுங்கணக்கு

தமிழில் எழுத்தொலிகள் படைக்கப்பட்ட காலம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். எழுத் தொலிகளை நெடுங்கணக்குமுறையில் வரிசைப்படுத்திய தமிழ்ச் சான்றோர்களின் நுட்பமான அறிவு போற்றற்குரியது. நெடுங்கணக்கு அமைப்பினை நோக்குவோம்.

அகரம் வாயைத் திறந்தஅளவில் வெளிப்படுதலால் அது முதல்எழுத்து ஆயிற்று. இகரம் கன்னங்களின் விரிதலொடு வாயைத் திறக்க வெளிப்படுவதால் அடுத்து வைக்கப்பட்டது. உகரம் உதடு குவிதலொடு வாயைத் திறப்பதனால் வெளிப்படுவதால் அதனை அடுத்து வைக்கப்பட்டது. ஆகார ஈகார ஊகாரங்கள் அகர இகர உகரங்களின் நீட்சியாகவே அவை முறையே அகர இகர உகரங்களை அடுத்து வைக்கப்பட்டன. அகரக்கூறும் இகரக்கூறும் இணைய ஏற்படும் எகர ஒலியும் அதன் நீட்சியாகிய ஏகார ஒலியும் அடுத்துவைக்கப்பட்டன. அகர இகரக்கூறுகளோடு யகரமெய்க்கூறும் இடைகலப்பதால் உண்டாகும் ஐகாரம் ஏகாரத்தைஅடுத்து வைக்கப்பட்டது. அகரக்கூறும் உகரக்கூறும் கலப்பதால் உண்டாகும் ஒகரமும் அதன் நீட்சியாகிய ஓகாரமும் நெடுங்கணக்கில் அடுத்து இடம் வழங்கப்பட்டுள்ளன. அகர உகர ஒலிகளோடு வகரமெய் ஒலியும் இடைமிடையத்தோன்றும் ஔகாரம் உயிரெழுத்து நெடுங்கணக்கில் இறுதியாக இடம்பெற்றது.

எனவே வாய் உறுப்புகளின் செயற்பாடின்றி அவை சம நிலையில் நிற்க, வாய் அங்காப்பக் குரல்வளையிலிருந்து வெளிப்படும் உயிர்இசையே அகரம் என்னும் அடிப்படை எழுத்தாகும். இவ்வகரம் எல்லா எழுத்தொலிகளுக்கும் அடிப்படையாகவும் துணையாகவும் அவை உள்ளிருந்து வெளிப்படும் நிலையில் செயற்படும். எனவே எந்த எழுத்து ஒலிக்கப்படினும் அவ்வெழுத்தொலியில் அகரவுயிரின் தொடர்பு ஒரளவேனும் தவறாது இணைந்திருக்கும். இது பற்றியன்றே வள்ளவனாரும்,

'அகர முதல எழுத்தெல்லாம்' (குறள் 1)

என்று குறிப்பிடுவார் ஆயினார். அவ்வகரமாகிய எழுத்தே வாய் இதழ்களின் கோணத்தாலும் நாவிளிம்பின் விரிவாலும் சுருக்கத்தாலும் ஏனைய பதினோருயிர்களையும் தோற்றுவித்துத் தான் தலையாக நின்று தமிழில் உயிர்ஒலிகள் பன்னிரண்டனையும் அமைத்துள்ளமை புலனாகும்.

குரல்வளை வாயிலாக வெளிப்படும் ஒலியை நாவும் இதழும் தடைசெய்யாது நிற்பின், அவ்வோசை உயிர்ப்பு இசையாய் உயிரெழுத்துகளைப் பிறப்பிக்கும் நாவும் இதழும் பல்லும் அண்ணமும் செயற்பட்டுத் தடைசெய்து அவ்வொலிகளை வெளிப்படுத்தும்போது அவை மெய் எழுத்துகளைப் பிறப்பிக்கும். எனவே, உயிர்ப்பு இசையால் வெளிப்படும் ஒலிகளாகிய உயிரெழுத்துகள் முன்னரும் தடைப்பட்டு வெளிப்படும் ஒலிகளாகிய மெய்யெழுத்துகள் பின்னரும் நெடுங்கணக்கில் வைக்கப்பட்டுள்ளன.

ககரமும் அடிநாஅடி மேல்வாயைப் பொருந்துலாலும் சகரம் இடைநா இடைமேல்வாயைப் பொருந்தலாலும் டகரம் நுனிநா நுனிமேல்வாயைப் பொருந்துதலாலும் பிறக்கும். ஙகார ஞகார ணகாரங்கள் முறையே ககர சகர டகரங்களின் பிறப்பிடத்தையே தம் பிறப்பிடமாகக் கொண்டு அதனோடு மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றுதலினாலே பிறத்தலின் முறையே கங, சஞ, டண என வல்லொலியும் அதற்கு இனமாகிய மெல்லொலியுமாக வைக்கப்பெற்றன.

முன்வாய்ப்பற்களை நாவின்நுனி நன்கு பொருந்துவதால் தகரமும் மேல்உதட்டைக் கீழ்உதடு பொருந்தப் பகரமும்

தோன்றுதலான் அவை அடுத்து இடம் பெற்றுள்ளன. தகரத்தின் ஒலியோடு மூக்கிசை சிவணுதலால் தோன்றும் நகரமும் பகரத்தின் ஒலியோடு மூக்கிசை இணைதலால் பிறக்கும் மகரமும் நகர பகரங்களை அடுத்து முறையே வைக்கப்பட்டன. வல்லின மெய்யாகிய ககரத்தில் தொடங்கியதுபோல வல்லினமெய்களுள் அழுத்தமான ஓசைஉடைய றகரத்தில் முடிதல் பொருத்தமானது என்ற கருத்தால் நுனிநா வளைந்து மேல்வாயை நன்கு தொடுவதால் தோன்றும் றகரம் இறுதி வல்லொளியாகவும், அதன் மூக்கின் வளியிசையொடு இணைந்த னகர ஒலி அதன் இனமாதலின் அதனை அடுத்து மெய்யெழுத்து நெடுங்கணக்கில் ஈற்றெழுத்தாகவும் வைக்கப்பட்டன.

அடிநா அடிமேல்வாயினை அழுத்திப் பொருந்துவதனால் யகரமும் நாவின்நுனி மேல்நோக்கி மேல்வாயைத் தொடுவதனால் ரகரமும் நாவின்நுனி முன்வாய்ப்பல்லின் அடிப்பகுதியைத் தொடுவதனால் லகரமும் மேற்பல்லைக் கீழ்உதடு பொருந்துவதனால் வகரமும் நாவின்நுனி சிறிது உள்வளைந்து மேல்வாயைத் தடவுவதால் ழகரமும் நாவின்நுனி உள்வளையாது மேல்வாயைத் தடவுவதனால் ளகரமும் பிறத்தலின் அவை பகர மகரங்களை அடுத்தும் றகர னகரங்களுக்கு முன்னரும் முறையே வைக்கப்பட்டன.

ஆய்தம் உயிரெழுத்துகள்போல ஒலிப்புடனேயே தோன்றுவதனாலும் மெய் எழுத்துகள்போல அரை மாத்திரை அளவே ஒலித்தாலும் உயிர்வருக்கத்து இறுதியில், மெய்வருக்கத்துக்கு முதலில் வீரசோழிய நூலுக்கு முற்பட்ட காலம் தொடங்கித் தமிழ் நெடுங்கணக்கில் அஃது இடம் பெற்று வருகிறது.

தொல்காப்பியனார் காலத்து முற்பட்ட காலம்தொட்டுத் தமிழ் நெடுங்கணக்கில் இம்முறையிலேயே உயிர்ஒலிகள் பன்னிரண்டும் ஒற்றுஒலிகள் பதினெட்டுமாக முப்பது ஒலிகள் தமிழின் அடிப்படை எழுத்துகளாகப் போற்றப்பட்டுள்ளன. மொழியிடையிலேயே படுத்து ஒலிக்கப்படும் ஆய்தம் ஏனைய குற்றியலிகர குற்றியலுகரங்கள் போலச் சார்பெழுத்தாகக் கொள்ளப்பட, தமிழின் அடிப்படை எழுத்துகள் முப்பதும்

சார்பெழுத்துகள் மூன்றுமாக முப்பத்துமூன்றும் தமிழ் எழுத்துக்களாக வரையறுக்கப்பட்டன.

## வரிவடிவ வேறுபாடுகள்

மொழி பல்லாயிரம் ஆண்டுகள் வளர்ந்து பேச்சுவழக்கில் பயில அம்மொழி பேசும் மக்கள் தத்தம் மனத்துப்பட்ட கருத்துகளைத் திறம்பட மற்றவர் உணருமாறு மொழிவாயிலாகப் பல சொற்றொடர்கள்மூலம் வெளிப் படுத்தியபின், தாம் அரிதின் முயன்று கண்ட செய்திகளைப் பின் தோன்றுபவர்களும் அறியவேண்டும் என்ற வேணவா அவர்கள் உள்ளத்தில் வெளிப்பட்ட காலத்திலேயே மொழியில் உள்ள ஒலி எழுத்துகளுக்கு வரிவடிவம் அமைத்தல் வேண்டும் என்ற இன்றியமையாமை அவர்கள் உள்ளத்தில் முகிழ்த்திருத்தல் வேண்டும். அங்ஙனம் ஒலி எழுத்துகளை வரிவடிவில் யாவரும் உள்ளங்கொள்ளும்வகையில் அமைப்பதற்குச் சிறிது காலம் ஆகியிருத்தல் கூடும். எழுத்துகளுக்கு வகுத்த வடிவத்தைச் சிதைவின்றிக் கற்கள் முதலியவற்றில் பொறிக்கலாம். அங்ஙனம் பொறிக்கப்படும் எழுத்துகள் கோடுகள் முதலியன செம்மையாக அமையப் பொறிக்கப்பட்டிருத்தலின் அவைகளேஎழுத்து எனப்பட்டன என்ப.

எழுத்துகளை கையின்துணையால் பனையோலை முதலியவற்றில் எழுத்தாணிகொண்டு எழுதும்போது ஒவ்வொருவரும் தத்தம் கையினைப் பயன்படுத்தும்போது ஏற்படும் சிலசில மாறுதல்களால் பனையோலை முதலியவற்றில் எழுதப்படும் எழுத்துகளின் பொதுஅமைப்பு யாவரும் உளம்கொள்ளும்வகையில் ஒருபடியாக இருப்பினும் வடிவில் அவரவர் கை பயன்படும்வகையை நோக்கச் சிறிதுசிறிது வேற்றுமை உடையதாகவே காணப்படுவது இயற்கை. இன்னும் ஒரே மொழியின் எழுத்துகளை எழுதும் பலருடைய கையெழுத்துகளும் பலதிறப்பட்டவையாக இருத்தல் கண்கூடு. விரைவில் எழுத முயலும் போது எழுத்துகளை வளைத்து எழுத முற்படுவதனால் சுவடிகள் முதலியவற்றில் எழுதப்படும் எழுத்து வட்டெழுத்து எனப்படும் என்பார் ஒருசாரார். மொழி அமைப்பில் தமக்கென்று ஒரு மரபினை வகுத்துக்கொண்ட தமிழ்ச் சான்றோர்கள்

வரிவடிவிலும் எழுத்தமைப்பிற்குத் தமக்கென்று ஒரு தனிவழியை வகுத்துக்கொண்டனர். வரிவடிவில் எழுதப்பெறாது ஒலி வடிவினாதாகவே-எழுதாக்கிளவியாகவே-தமிழில் எந்த ஒரு நூலும் இருந்ததாக அறியக்கூடவில்லை. சில காலம் இறையனார் அகப்பொருள் உரை கர்ணபரம்பரையாகவந்தது என்பது ஒரு கற்பனையே, எனவே பேச்சுமொழி செப்பமுற்று அம்மொழியில் சான்றோர் தம் கருத்துகளை நூலாக வடித்துத் தர முற்பட்ட காலத்திலேயே தமிழ் எழுத்துகளுக்குத் தமிழ்ச்சான்றோர் வரிவடிவமும் அமைத்துவிட்டனர் என்றே கருதவேண்டியுள்ளோம்.

எழுத்தமைப்பு தமிழர்களுக்குக் கைவந்த கலையாகும். பாரததேசம் முழுதும் பரவியிருக்கும் சமசுகிருதத்தைத் தமிழகம் தவிர ஏனைய பாரதப் பகுதியிலுள்ளார் யாவரும் தேவநாகரி வடிவிலேயே எழுதியகாலத்தில் சமசுகிருதத்தை எழுதுவதற்குத் தமிழர் கிரந்த எழுத்து என்ற ஓர் எழுத்துமுறையை உருவாக்கினர். அக்கிரந்த வரிவடிவம் தமிழ் எழுத்தின் வரிவடிவை ஒத்ததாகவே அமைந்துள்ளது. தேவநாகரி வடிவில் நான்கு ஏடுகளில் எழுதப்படும் பகுதியைக் கிரந்த எழுத்தில் ஒன்றரை ஏடுகளில் அடக்கிவிடலாம். அச்சுப் பொறியின் தொடக்ககாலத்தில் பாரததேசத்தின் ஏனைய பகுதியிலுள்ளார் தேவநாகிரி எழுத்தில் பெரிய எழுத்துகளை அமைத்து ஆயிரக்கணக்கான பக்கங்களில் பதிப்பித்த வான்மீகி இராமாயணம் மூலமும் உரையும் போன்ற நூல்கள் தமிழகத்தில் கிரந்த எழுத்தில் சில நூறு பக்க அளவில் முழுமையாகப் பதிப்பிக்கப்பட்டன. தேவநாகரி எழுத்தைவிடக் கிரந்த எழுத்து விரைவில் எழுதுவதற்கும் ஏற்றதாய் அமைந்தது. எனவே தமிழகத்தில் அச்சுவடிவில் வெளிவந்த சமசுகிருத நூல்கள் யாவும் கிரந்த எழுத்தின் வாயிலாகவே வெளியிடப்பட்டன. ஓரைம்பது ஆண்டுகளாகத் தமிழகத்தார் கிரந்த எழுத்தைப் புறக்கணித்ததாலும் கிரந்த எழுத்து அறியாமை காரணமாகப் பாரததேசத்தின் ஏனைப்பகுதிகளில் வாழும் சான்றோர்கள் அந்த எழுத்தில் எழுதப்பட்ட வடமொழி நூல்களை உணர இயலாததாலும் கிரந்த எழுத்துப் பெரும்பாலும் வழக்கற்று வருகிறது. வடமொழியில் பட்டங்கள் பெற்ற சான்றோர்களில் தமிழ்நாட்டில் வாழ்பவர்கூடக் கிரந்த எழுத்தில்

அச்சிடப்பட்ட நூல்களை வாசிப்பதற்கு இயலாது தடுமாறுவதனைக் காண்கிறோம்.

தமிழகக் கல்வெட்டுப் பகுதிகளிலுள் வடமொழிப்பகுதி ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நிலையிலும் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டதாகவே காண்கிறோம். வடமொழி கலந்த தமிழ்நடையில் வரையப்பெற்ற வைணவ நூல்கள் பலவும் அண்மைக் காலம் வரை வடமொழிப் பகுதிகளுக்குக் கிரந்த எழுத்தையே அச்சிடப்பயன்படுத்தி வந்தன. இப்பொழுது வரும் புதிய பதிப்புகளில் கிரந்த எழுத்தின் இடத்தைத் தேவநாகரி எழுத்து எனப்படுவது, வடஇந்திய மொழிகள் பலவற்றையும் எழுதப்பயன்படுவதும் ஆகிய எழுத்தே ஆக்ரமித்துக்கொண்ட நிலையைக் காண்கிறோம். நம் முன்னோர் தம் தனித்தன்மையை வெளிப்படுத்தப் படைத்துத் தந்ததும் ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆண்டுகளாகத் தாம் சமசுகிருத நூல்களையும் சொற்களையும் எழுதப்பயன்படுத்தி வந்ததும் ஆகிய கிரந்த எழுத்தைப் போற்ற முன்வாராது நெகிழ்க்க முற்பட்டது நம் பேற்றுக்குறைவே. அதுமட்டும் அன்று. கிரந்த எழுத்துகளில் ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்ற ஐந்து எழுத்துகளை மாத்திரம் நாம் நடைமுறையில் ஏற்றுப்பயன்படுத்தி வருகிறோம். வடமொழி மெய்யெழுத்து களின் நெடுங்கணக்கில் முப்பதாவது எழுத்தாகிய சச என்ப தனை நாம் பயன்படுத்த மறந்ததன் காரணம் புலப்படவில்லை. அதனைப் பயன்படுத்தாது போயினும் தவறில்லை. அதனைத் தமிழ் எழுத்தாகிய சகரத்தின் வாயிலாக நாம் மேற்கொள்ளலாம். அதனையும் செய்யாமல் சச என்ற எழுத்துப் பயன்பட வேண்டிய இடங்களில் ஸ என்ற எழுத்தைப் பயன்படுத்துவதே பெருந்தவறாகும். இப் பெருந்தவறு நம் திருக்கோயில்களிலே முதலில் முகிழ்த்தெழுந்தது எனலாம். தஞ்சைப் பெருவுடையாரைத் தஞ்சை ராஜராஜீஸ்வரம் உடையார் எனப்பண்டைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. அப்பெருமானை ப்ரஹதீஸ்வரர் என்று இக்காலத்தார் வழங்குகின்றனர். ப்ரஹதீஸ்வரர் என்பதனைத் தமிழ் எழுத்தால் பிரகதீசுவரர் என்று குறிப்பதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால் தமிழ் மரபோடு வடஎழுத்தையும் அருகித் தேவைப்பட்ட இடங்களில் பயன்படுத்துவதாகக் கூறிக்கொண்டு பிரகதீஸ்வரர் என்று வரவேண்டிய இடத்தில் ஸகரத்திற்கு இடம் கொடுப்பது

பெருந்தவறு. சிவன் (ஸ்வன்) என்பதனை ஸிவன் என்று தவறாக எழுதமுற்படாத தமிழ்ச் சான்றோர் ஈசுவரன் என்பதனை ஈசுவரன் என்று எழுத மனமின்றி ஈஸ்வரன் என்று தவறாக எழுதி வருவது வருந்தத்தக்கது.

தமிழின் நெடுங்கணக்கு வடமொழியின் நெடுங்கணக்கைப் பார்த்து அமைந்தது அன்று என்பது போலவே, தமிழின் வரிவடிவங்களும் வடமொழி எழுத்து வரிவடிவங்களை உட்கொண்டு அமைக்கப்பட்டன அல்ல என்பதும் வடமொழியை எழுதத் தமிழர் தமக்கென்று சிறப்பான முறையில் அமைத்துக் கொண்ட வரிவடிவம்ஆகிய கிரந்தம் இக்காலை போற்றப்படாது நெகிழ்த்தப்படுகிறது என்றும் கண்டோம். இதனால் தேவநாகரி எழுத்தில் அச்சிடப்படாது கிரந்த எழுத்தில் அச்சிடப்பட்ட இந்நூற்றாண்டுத் தொடக்கத்து நூல்கள் பல அடுத்த நூற்றாண்டில் உணர்வார் அற்று வழக்கிழந்து போகும் என்பது ஒருதலை.

இனி, தமிழ்மொழி எழுத்துகளின் தனித்தன்மையையும் அவை தமிழ் மக்களால் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எங்ஙனம் செப்பமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன என்பதனையும் தொல்காப்பியம் துணைக்கொண்டு நோக்குவோம். தொல்காப்பிய எழுத்துப் படலத்துக்கு ஆசிரியர் பாலசுந்தரனார் அண்மையில் வரைந்துள்ள ஆராய்ச்சிக் காண்டிகை தமிழ்மொழியின் எழுத்தமைப்பின் சீர்மையைத் திறம்படச் சுட்டியுள்ளமையின் அவ்வாசிரியர் குறிப்பிட்டுள்ள பல செய்திகளை இதன்கண் எடுத்துக்கூறுதல் பொருத்தமானதாகும்.

## எழுத்தொலியும் ஓசையும்

மூலாதாரத்தின்மேல் அமைந்துள்ள நாத தத்துவம், சிதாகாசம் என்னும் உச்சிநடுவின் உணர்வினால் எழுத்தொலிகள் தூண்டப்பட்டுக் கிளர்ந்து, உயிர்க்காற்றினது ஓசையாய் வளியொடிகூடி உந்தியில் நிலைபெற்றுச் சிந்தையில் நிகழும் கருத்துக்களைத் தனக்கு அகநிலையாகவும் பிறருக்கு அவர்தம் செவி வாயிலாக உணரப்படும் புறநிலையாகவும் அறிவிக்கும் நிலையில் உருப்பெற்று நிகழும். இவற்றுள் அகத்தெழு வளியிசை உள்ளுணர்வு உடைய யோகியர்க்கே

புலனாகிப் பயன்தரும் ஆதலின் மிகச் சிறுபான்மையராகிய அவர்களை விடுத்து, பொதுவாக மொழியைப் பயன்கொள்ளும் எல்லாருக்கும் பயன்படும் மெய்தெரிவளியிசையே இலக்கண நூல்களில் விளக்கப்படும் என்பது தொல்காப்பியனார் கருத்து.

இவ்வாறு இலக்கண நூல்களில் விளக்கப்படும் புறத்தெழுவளியிசை உயிர்ப்பு ஒலியாய் உயிர்களையும் ஒற்று ஒலியாய் மெய்கள் குற்றியலிகரம் குற்றியலுகரங்களையும் அஃகு ஓசையாய் ஆய்தத்தையும் கண்டத்தின் வாயிலாக வெளிப்படுத்தும். எழுத்து ஒலி தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைபெற்று வெளிப்படும். இவற்றுள் தலை கருத்து மையமாக உணர்வு அடிப்படையை உண்டாக்கும். மிடறு உணர்வு மையமாகக் குரல்வளை நரம்புகளை இயக்கும். நெஞ்சு உந்தியிலிருந்து தோன்றிவரும் காற்றின் ஓசையை நிரப்பி மேற்செலுத்தும். இங்ஙனம் உந்தியிலிருந்து வரும் ஓசையை ஒலி எழுத்துகளாக வெளிப்படுத்தும் உறுப்புகள் மிடறும் உள்மூக்குமாகும். அவ்வொலிஎழுத்துகளைச் செப்பமாக உருவாக்கும் நிலை உறுப்புகள் மேல்வாயும் பற்களும் ஆகும். இயங்கு உறுப்புகள் நாவும் உதடுகளும் ஆகும். ஒலியை வெளிப்படுத்த உதவும் இந்த உறுப்புகளில் பற்கள் நீங்கலாக ஏனைய உறுப்புகள் யாவும் உடல் நன்னிலையில் இருக்கும் வரைத் தடங்கலின்றிச் செயற்படக்கூடியன. ஆனால் மூப்பு நலியப் பற்கள் எஞ்சாமல் உதிர்ந்துவிடுதலும் நிகழும். அந்நிலையில் நிலை உறுப்புகளுள் தலைசிறந்த பற்கள் இல்லாமல் போவதால் எழுத்தொலிகளை எவ்வளவு முயன்றாலும் எதிர்பார்க்கும் அளவிற்குச் செப்பமாக ஒலித்தல் இயலாது போகின்றது. இதனாலன்றோ ‘பல்லுப் போனால் சொல்லுப் போச்சு’ என்ற பழமொழியும் வழங்குவதாயிற்று.

உயிரெழுத்து மெய்யினை ஊருவதால் ஏற்படும் கூட்டெழுத்து உயிர்மெய் எழுத்து என்று தமிழ்ச் சான்றோர்களால் பெயரிடப்பட்டது. வடமொழியில் உயிர்மெய் எழுத்துகள் பலவகை இருப்பினும் அவற்றிற்குத் தனியே உயிர்மெய் என்றாற்போலப் பெயர் வகுக்கப்படாதது வியப்பாகவே உள்ளது. இந்த உயிர்மெய் எழுத்துகளில் மெய் ஒலியும் உயிர் ஒலியும் கலந்து இருப்பினும் மெய்யொலி முன்னும் உயிரொலி பின்னுமாக அமைய மெய்யொலியின்

சுவடும் உயிரொலி பெரும்பாலும் முழுமையும் அமைந்திருப்பதனால் தமிழ்ச் சான்றோர்கள் உயிர்மெய் எழுத்து உயிரளவிற்றே, என்று குறிப்பிட்டனர். அகரம் முதலாகப் பன்னிரண்டு கோணங்களில் வெளிவரும் உயிர்ப்பிசையினை நாவானது அண்பல்லோடும் அண்ணத்தோடும் உற்றும், உறழ்ந்தும், இதழானது பல்லொடும் இதழொடும் இயைந்து, தடைப்படுத்தி வெளிப்படுத்தும் நிலைமையான் வருவன உயிர்மெய் என்ற பாலசுந்தரனாரின் விளக்கம் உயிர்மெய் எழுத்தில் உயிரொலியின் சிறப்பினை விளக்குவதாகும்.

இந்த உயிர்மெய் ஒலிக்குத் தனி வரிவடிவம் அமைத்த சான்றோர்களின் செயல் பாராட்டத்தக்கது. நாம் பேசும் போது தமிழ்மொழியின் உயிர்மெய் எழுத்துகள் உயிர்களின் மாத்திரை அளவாகவே ஒலிக்கப்படுதலை உட்கொண்டு, உயிர்மெய்யை ஒரெழுத்தாகவே எழுதியதனால் ஒலித்தல் தூய்மையொடு எழுத்துச் சுருக்கமும் உண்டாதலைக் காணலாம்.

உயிர்மெய் பற்றிப் பாலசுந்தரனார் கூறுவது சிறப்பாக உள்ளது. பதினெட்டு மெய்களும் வாய்க்குள் வடிவு கொள்ளுங்கால் செவியுள் வருவதில்லை. அவற்றிற்கு உரிய அநுகரண ஓசையைக் கொடுத்து, அவற்றை வெளிப்படுத்தும் போது, அவற்றுக்கான ஓசை அரைமாத்திரை அளவிற்றாகவே இருக்கும். இதனைத் தொல்காப்பியனார். 'மெய்யின் அளவே அரைஎன மொழிய' (எழுத்து 11) என்கிறார். மெய்யினது முழுத்தன்மையைப் புலப்படுத்த வேண்டின் எழுத்துச் சாரியையாய்த் தமிழுக்கே உரித்தான அகரச் சாரியையைப் புணர்த்தே ஒலித்தல் வேண்டும். இதனைத் தொல் காப்பியனார். 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்' (எழுத்து. 46) என்கிறார். எனவே மெய்க்கு வடிவுகொள்ளும் அகநிலை, ஒலிப்புற்று நிற்கும் புறநிலை என்ற இருநிலை உண்டு. வடிவுகொள்ளும் அகநிலையாக உள்ள நிலையிலேயே மெய்கள் ஏற இடம் கொடுக்கின்றன ஒலிப்புற்று நிற்கும் நிலையில் புள்ளி என்று கூறப்படும் அம்மெய்கள், ஒலிப்புற்று நிற்கும் அந்நிலையை நீத்துப் பண்டை வடிவுடைய நிலையிலேயே உயிர் ஏற இடங்கொடுத்தலைத் தொல் காப்பியனார்.

'புள்ளி யீற்றுமுன் உயிர்தனித்தியலாது
மெய்யோடும் சிவணும் அவ்வியல் கெடுத்தே'

(எழுத்து. 138)

என்று குறிப்பிடுகிறார். மெய்யினை ஊர்ந்துவரும் உயிர், தன் தலைமைப்பாட்டினையும் பிறப்பிடத்தையும் இழந்து மெய்க்குத் துணையாகி அவற்றுக்குத் தலைமைப்பாட்டினைத் தருவதால் மெய் ஊர்ந்துவரும் உயிரை உயிர்மெய் என்கிறோம். ஒலிப்புற்று நில்லாது வாய்க்குள் வடிவுற்று நிற்கும் மெய்யின் பிறப்பிடத்தையும் வளியிசையையும் பெற்று உயிர், உயிர் மெய்யாக வெளிப்படுவதால் உயிர்மெய் மாத்திரையே பெறுகிறது. இவ்வாறு மெய்க்குத் துணையாகும் உயிர்கள் தமக்குரிய கண்டமாகிய பிறப்பிடத்தையும் மிடற்று வளியிசையையும் நெகிழ்ந்து தாம் ஊர்ந்துவரும் மெய்யின் பிறப்பிடத்தையும் வளியிசையையும் பெற்று வெளிப்படுவதை 'மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே' (எழுத்து. 18) என்கிறார். உயிர்மெய் உயிருக்குரிய குறில் நெடில் தன்மையையும் மெய்க்குரிய வன்மை மென்மை இடைமைத் தன்மையையும்கொண்டு, ஓரே எழுத்தாகக் கொள்ளப்பட்டு, வரிவடிவிலும் ஓரே எழுத்தாக எழுதப்படினும் புணர்ச்சி என்பது எழுத்தொலியின் மயக்கம் ஆதலின் உயிர்மெய் புணர்ச்சிக்கண் ஒற்றொலியும் உயிரொலியுமாகப் பிரித்துக் கொள்ளப்படும். மெய்க்குத் துணையாகி உயிர் மெய்யை அமைக்கும் உயிர் தனக்குரிய பிறப்பிடத்தையும் வளியிசை யையும் நெகிழ்ப்பது போலவே வரிவடிவின் கண்ணும் உயிர்மெய் தனக்குரிய உயிர் வடிவத்தை நெகிழ்ந்து மெய்வடிவத்தை முழுமையாகக் கொண்டு அதன்கண் உயிர்வடிவத்தின் சிறு சுவடே புலப்படுமாறு எழுதப்படு வதனை நோக்கலாம்.

தமிழில் குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் மூன்றும் சார்பெழுத்துகளாக உள்ளன.

ஏவல் ஒருமை வினைப்பகுதியை அடுத்துவரும் மியா என்ற அசைச் சொல்லின் இகரமும் யகரம் வருமொழி முதலில் வர நிலைமொழி இறுதியிலுள்ள குற்றியலுகரம் கெட அதனிடத்து வந்து பொருந்தும் இகரமும் அரைமாத்திரை

அளவினதாகிய குற்றியலிகரமாகும். இஃது அரைமாத்திரை அளவிற்று என்பதனைக் காட்ட வரிவடிவில் புள்ளியிட்டு எழுதப்பட வேண்டுவது. குற்றியலிகரத்தை ஈற்றில் கொண்ட ஒரு சொற்கும் முற்றியலிகரத்தை ஈற்றில் கொண்ட அதே சொற்கும் பொருள் வேறுபாடு உண்டு.

ஆடி, சுவடி, தொண்டி, கொக்கி, கண்டி, குறும்பி போன்ற சொற்கள் யகர முதல் மொழியொடும் புணரும்போதும், ஆடு, சுவடு, தொண்டு, கொக்கு, கண்டு, குறும்பு போன்ற குற்றியலுகர ஈற்றுச் சொற்கள் யகர முதல்மொழியொடு புணரும்போதும் ஆடியாறு, தொண்டியாறு, கொக்கியாறு, கண்டியாறு, குறும்பியாறு என்றே புணரும். இவை முற்றியலிகரமாகும்போது பொருள்வேறு; குற்றியலிகர மாகும்போது பொருள் வேறு என்பதனை உய்த்துணர்ந்து குற்றியலிகரம் என்ற எழுத்தின் இன்றியமையாமையை உணரலாம்.

கண்டி - ஆண் எருமை; கண்டு - கற்கண்டு. குறும்பி - புற்றா ஞ்சோறு குறும்பு - சேட்டை, தொண்டி - ஓர் ஊர்; ஆடி - கண்ணாடி;

## குற்றியலுகரம்

தடையுற்றுப் பிறக்கும் வல்லெழுத்துகள் கரம்குறை உரிச்சொற்களின் ஈற்றெழுத்துக்கள் அமையுங்கால் அவற்றை வெளிப்படுத்தற்குத் துணையாகிவரும் அரை மாத்திரை உயிர்ப்பிசை உடைய ஒலியே குற்றியலுகரம் ஆகும். அரை மாத்திரை உயிர்ப்பொலியே உடையதாதலின் உயிர் எழுத்து ஏற இடங்கொடுத்துத் தன் அரைமாத்திரையை இழந்துவிடும். இச்செய்திகள்

*மெய்யின் அளவே அரை என மொழிப.* எ-11
*அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே.* எ-12
*மெய்யீறு எல்லாம் புள்ளியொடு நிலையல்.* எ-104
*குற்றியலுகரத்து இயற்கையும் அற்றே.* எ-105
*புள்ளி ஈற்றுமுன் உயிர் தனித்து இயலாது*
*மெய்யோடும் சிவணும் அவ்வியல் கெடுத்தே.* எ-138
*மெய்உயிர் நீங்கின் தன்னுரு வாகும்.*

எனச் சார்பெழுத்துகளுக்கும் மெய்யெழுத்திற்கு ஓதப்படும் இலக்கணங்களை மாட்டெறிந்து கூறப்படுவதனால் அறியலாம்.

ஒரே வகையாக அமைந்த குற்றியலுகரச் சொல்லிற்கும் முற்றியலுகரச் சொல்லிற்கும் பொருள் வேறுபாடு உண்டு. மொழி இறுதிக் குற்றியலுகரச் சொல் பெயராகவே இருக்கும். அதே வடிவுடைய முற்றியலுகரச் சொல் ஏவல் ஒருமை வினை முற்றாகவே இருக்கும். வரிவடிவில் முற்றியலுகரம் புள்ளிபெறாது. குற்றியலுகரம் புள்ளியிட்டு எழுதப்பெறும்.

| குற்றியலுகரம் | முற்றியலுகரம் |
|---|---|
| நாடு (தேயம்) | நாடு - ஆராய்வாயாக |
| காது (செவி) | காது - மோதுவாயாக |
| கட்டு (பொதி) | கட்டு - பிணிப்பாயாக |
| கொத்து (இணர்) | கொத்து - தோண்டுவாயாக |
| நோக்கு (விழி) | நோக்கு - பார்ப்பாயாக |
| நுங்கு (பனஞ்சுளை) | நுங்கு - விழுங்குவாயாக |
| ஒன்று (முதல் எண்) | ஒன்று - பொருந்துவாயாக |
| முருகு (அழகு) | முருகு - முதிர்வாயாக |
| கடுகு (ஒரு தானியம்) | கடுகு - விரைவாயாக |
| பெருக்கு (வெள்ளம்) | பெருக்கு - மிகுப்பாயாக |
| ஒற்று (ஒற்றன்) | ஒற்று - பிறர் அறியாமல் அறிந்து வருவாயாக |
| கொட்டு (களைக்கொட்டு) | கொட்டு - வீசி ஊற்றுவாயாக |
| ஆடு (ஒரு விலங்கு) | ஆடு - ஆடுவாயாக |
| ஓடு (கூரை வேயும் ஓடு) | ஓடு - விரைந்து செல்வாயாக |
| பாடு (துன்பம்) | பாடு - பாடுவாயாக |
| நூறு (ஓர் எண்) | நூறு - அழிப்பாயாக |

மேற்குறிப்பிடப்பட்டவற்றில் குற்றுகரத்தை இதழ் குவியாமலும் முற்றுகரத்தை இதழ் குவித்தும் முறையே அரை மாத்திரை, ஒரு மாத்திரை அளவினதாக ஒலித்துப் பொருள் வேறுபாடும் உணர்த்தி வந்தனர் நம் பண்டைச் சான்றோர்கள் என்பது அவர்கள் குற்றியலுகரத்திற்கும் முற்றியலுகரத்திற்கும் வரிவடிவிலும் வேற்றுமை காட்டக் குற்றியலுகரத்துக்குப்

புள்ளியிட்டு எழுதி வந்தனர் என்பதும் அவர்தம் எழுத்துப் பற்றிய தெளிவான கருத்துகளைப் புலப்படுப்பனவாகும்.

ஏவல் ஒருமைக்கண் குற்றியலுகர ஈறுவாராது என்பதனைத் தொல்காப்பியனார்
'குற்றியலுகரத்து இறுதியும் உளப்பட
முற்றத்தோன்றா முன்னிய மொழிக்கே' - எ. 152

என்ற நூற்பா அடிகளில் குறிப்பிட்டதும் நோக்கத்தக்கது.

## ஆய்தம்

இச்சார்பெழுத்து வாயின் அங்காப்பு, வாய் இதழ்களின் குவிவும் நா விளிம்பின் விரிவு சுருக்கம் என்ற உயிர் முக்கோணத்தின் இசையை உள்ளடக்கி மெய்யைப் போல அரை மாத்திரை அளவிற்றாய் உயிரைப் போல ஒலிப்புடனேயே தோன்றும் தனிச்சிறப்புடையதாய் மொழிஇடையே குற்றெழுத்திற்கும் வல்லெழுத்திற்கும் இடையே தோன்றி வரும் தனிச்சிறப்பு உடைமை பற்றித் தனிநிலை எனவும் கூறப்படுவதாய், யாப்பில் ஒரோவழி உயிர் போல எடுத்துக்கொள்ளப்பட்டும் ஒரோவழி மெய்போல எழுத்து எண்ணப்படாமலும் வருவது. வரிவடிவிலும் கோடுகளாக அமையாமல் தனிச்சிறப்பாக மூன்று புள்ளிவடி விற்றாகவே எழுதப்படுவது.

அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு - குறள் 943.

என்புழி உயிர்போல அலகுபெற்றும்

தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று - குறள் 236.

என்புழி மெய்போல அலகுபெறாமலும் ஆய்தம் வரும் நுணுக்கத்தைக் காண்க. இவ்வாய்தம் செய்யுளில் தொடைநலம் நோக்குமிடத்து எதுகைக் கண் யகரத்துக்கு மாற்றெழுத்தாக வரும்.

செய்க பொருள் யாரும் செறுவாரைச் செறுகிற்கும்
எஃகு பிறிதில்லை இருந்தேயும் உயிருமுன்னும்

ஐயமில்லை இன்பம் அறனோ டவையுமாக்கும்
பொய்யில் பொருளே பொருள் மற்றல்ல பிறபொருளே.

- சிந் - 497.

ஆய்தம் அமைந்துவரும் சொற்கள் சிலவே ஆதலின் அருகிப் பாடலில் எல்லா அடிகளிலும் ஆய்தமே எதுகையில் வரும் இடனும் உண்டு.

எஃகென இலங்கு வாட்கண் எறிகடல் அமுத மற்றார்
அஃகிய மதுகை தன்னால் ஆய்மயில் ஊரும் ஆங்கண்
வெஃகிய புகழினான்தன் வென்றிவெம் முரசம் ஆர்ப்ப
எஃகெறி பிணையின் மாழ்கி இறுகிமெய் மறந்து சோர்ந்தாள்.

-சிந். 299.

இவ்வாறு எதுகைத் தொடை அமைப்பிலும் தமிழ்ச் சான்றோர்கள் ஆய்தத்துக்கு இருநிலையும் வழங்கியுள்ளனர்.

## அளபெடை

இனி உயிரெழுத்துகள் ஒரோவழி நீண்டும் ஒரோவழிக் குறுகியும் ஒற்றெழுத்துகள் ஒரோவழி நீண்டும் ஒரோவழிக் குறுகியும் ஒலிக்கும் திறனையும் நம் முன்னோர்கள் வரையறுத்துள்ளனர்.

தனியே உயிர் நெடிலோ, உயிர்மெய் நெடிலோ, இரண்டு மாத்திரைக்குமேல் ஒலித்தல் கூடாது. ஒலியை நீட்ட வேண்டின் தேவைப்பட்ட மாத்திரைக்கு வேண்டிய அவ்வந் நெடிலின் இனக்குற்றெழுத்தை இணைத்து அவ்வொலி நீட்டத்தைக் கோடல் வேண்டும். அங்ஙனம் ஒலி நீட்டத்துக்குப் பயன்படும் இனக்குற்றெழுத்து அளபெடை எழுத்து எனப்படும். உயிர்நெடில் ஏழும் அளபெடுக்கும். இனக்குறில் இல்லாத ஐகார ஔகாரங்கள் முறையே இகர உகரங்களை இனக்குறிலாகக் கொண்டு அளபெடுக்கும்.

குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத் திம்பர் ஒத்தகுற் றெழுத்தே.
ஐ ஔ என்னும் ஆயீ ரெழுத்திற்கும்
இகர உகரம் இசைநிறை வாகும்.

அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே. - பொ. 329
(உம்மையான் ஆகாமையும் உரித்து)

ஒரோவழிக் குறில் நெடிலாக நீண்டு பின் அளபெடுப்பதும் உண்டு.

ழகர உகரம் நீடிடல் உடைத்தே
உகரம் வருதல் ஆவயி னான. - எ. 261

இவ்வளபெடை பெரும்பாலும் செய்யுட்கண் சீர் நிறைக்கவும் பா என்னும் ஓசை நிகழவும் அளபெடுக்கும்.

'அளபெடை நிலையும் காலத் தானும்
அளபெடை இன்றித் தான்வரு காலையும்
உளவெனப் படுப பொருள்வேறு படுதல்' சொ - 283.

என்ற நூற்பாப் பகுதி அளபெடை ஒரோவழிப் பொருள் வேறுபாடு தருதற்கும் பயன்படுதலைக் குறிப்பிடுகிறது. இந்நூற்பா உரையுள் ஆசிரியர் நச்சினார்க்கினியர் வெள-கைப்பற்று, வெளஉ-தவறாது கைப்பற்றியே விடு, என்ற பொருள் வேறுபாடுகளைக் காட்டுகிறார்.

இனி அளபெடையை ஆசிரியர் அறிமுகம் செய்துவைக்கும் நூற்பாவிலேயே
நீட்டம் வேண்டின் அவ்வள புடைய
கூட்டி எழூஉதல் என்மனார் புலவர். -எ. 6

என எழு-தன்வினை; எழூஉ-பிறவினை என்பதனை உடம் பொடு புணர்த்துக் கூறுகிறார். தன்வினையைப் பிறவினை யாக்குதற்கண் வினைப்பகுதியின் ஈற்றுக் குற்றுயிர் நீண்டு அளபெடுத்தலை ஆசிரியர் உட்கொண்டுள்ள செய்தி உணரப் படுவதால் உயிர் அளபெடை ஓசை நிரப்புவதற்கு மட்டும் பயன்படாமல், தமிழில் பொருள் வேறுபாடு தரவும் பயன்படுத்துப்பட்டுள்ள செய்தியை உணர்கிறோம். குறில் நெடிலாகிப் பின் அளபெடுக்கும் நிலையிலேயே தன்வினை பிறவினையாக்கப்படும் செய்தியை,

துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொல் லவர்க்கு, - குறள். 94.

என்ற குறட்பாவானும் உறுதி செய்யலாம். துன்புறு-வருந்து, இன்புறு-மகிழ்; துன்புறூஉ-பிறரை வருத்து; இன்புறூஉ பிறரை மகிழச் செய்.

வினையெச்ச, பெயரெச்ச வாய்பாடுகளைக் கூற்று மாற்றி அமைக்கும் இடத்தும் இவ்வுயிரளபெடை தமிழில் பயன்படுகிறது.

உடுத்து - உடீஇ; தூவி - தூஉய்; குழுமி - குழீஇ;
மருவி - மரீஇ; விரவி - விராஅய்; நச்சி - நசைஇ.

"நீக்கி நிறுத்தும் உரவோரோ-நீக்கி

நிறூஉம் உரவோரே" நாலடி 57.

என்பனவும் காண்க.

## ஐகாரக் குறுக்கம்

உயிரெழுத்துகளுள் ஐகாரம் செய்யுட்கண் சீர்நிலை கருதியும் தொடைநிலை கருதியும் அய்என்னும் மாற்றெழுத் தாய்த் திரியும்.

கய்வேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்'. - குறள். 774.

'மெய், என்ற இரண்டாம் அடியை நோக்க முதல் அடியில் கை என்பது கய் என்றே ஒலிக்கப்படுதலைக் காணலாம். ஒலித்தல் எளிமை கருதிச் சொற்களின் இடையிலும் ஈற்றிலும் ஐகாரம் முறையே அகரமாகவும் அய் எனவும் ஒலித்தலையும் காணலாம். நிலையம்-நிலயம், குவளை-குவளய் என்றாற் போல ஐகாரம் முறையே அகரமாக மாறுதலையும் அய் போல ஒலித்தலையும் முன்னோர் சுட்டி, ஐகாரக்குறுக்கம் என்ற ஒன்றினைக் குறிப்பிட்டுள்ளனர்'.

ஐகார ஈற்றுச்சொல் வருமொழி உயிரொடு புணரும் போது - கங்கையையும் என்பது கங்கையய்உம் என்றாகி கங்கயயும் என்றாற் போல ஒருமாத்திரை அளவிற்றாய் ஒரோவழி ஒலித்தலையும் சுட்டியுள்ளனர்.

அகரத்திம்பர் யகரப் புள்ளியும் (இகரமேயன்றி)
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும் எ-56
ஓரள பாகும் இடனுமா ருண்டே
தேருங் காலை மொழிவயி னான. எ-57

## ஔகாரக் குறுக்கம்

ஒரோவழி ஔகாரமும் மொழி முதற்கண் அய் என்றாற்போலத் தொடைநயம் கருதி ஒன்றரை மாத்திரையாக ஆதலும் உண்டு.

கௌ (கவ்)வை நீர் வேலிக் கடிதே காண் கற்புடைமை
வெவ்வேல்வா. வீழ்ந்தான் விறல்வெய்யோன்

புறப்பொருள் வெ.மா. 84.

இந்நிலை தொல்காப்பியர் காலத்துக்குப் பிற்பட்டதுபோலும்.

## ஒற்றளபெடை

கண்ண் டண்ணெனக் கண்டும் கேட்டும் - மலைபடு-352 என்றாற் போலச் செய்யுட்களில் மாத்திரம் வரும் ஒற்றள பெடை ஓசை நிறைப்பதற்கே பயன்படுதலின் தொல் காப்பியனார் ஒற்றளபெடையைச் செய்யுளியலில் குறிப் பிட்டார்.

லகர ளகரங்கள் திரிந்த னகர ணகரங்களில் பின் ஒருமொழிக்கண் ஈற்றெழுத்தாக வரும் மகரம், தன் இயல்பான அரைமாத்திரையிலும் குறுகும். அவ்வாறே நிலைமொழி ஈற்று மகரம் ஒரு வருமொழித் தொடர்நிலை லகரம் வரின் குறுகும். இத்தகைய குறுக்கம் முன்னெழுத்து பின்எழுத்து இவற்றின் பிறப்பியல் முயற்சியான் ஏற்படக்கூடியது என்ற நுட்பத்தையறிந்து போன்ம், மருண்ம், வரும்வளவன் என்றாற் போல்வனவற்றில் வரும் மகரம் கால்மாத்திரை அளவிற்றாகக் குறுகும் என்பது முன்னவர் கருத்து.

தொல்காப்பியனார் லகரம் திரிந்த னகரத்தை அடுத்த மகரத்தை மாத்திரம் சுட்டினார். பின்னையோர் ளகரம் திரிந்த ணகரம் அடுத்த மகரத்தையும் கொண்டனர். மகரக் குறுக்கத்தின் வரிவடிவம்

"உட்பெறுபுள்ளி உருவாகும்மே". எ-14.

எனப் புறத்துப் பெறும் புள்ளியோடு உள்ளாற்பெறும் புள்ளியும் அடுத்து வரும் என்று சுட்டப்பட்டுள்ளது. ஓரோவழி உரையாடும்போது ஈற்றில் வரும் ஏகாரம் ஒருமாத்திரை உடைய யகரம்போல ஒலிக்கப்படுவதும் உண்டு. உண்டாயோ என்ற வினாவிற்கு விடையிறுப்பவன் உண்டேனே என்று மறுமொழி கூறும்போது ஈற்று ஏகாரம் ஒரு மாத்திரை குறைந்து உண்டேனெ என்று ஒலித்தலாகிய நுட்பமும் தொல்காப்பியத்தில் சுட்டப்பட்டுள்ளது.

ஈற்று நின்று இசைக்கும் ஏ என் இறுதி
கூற்றுவயின் ஒரளபு ஆதலும் உரித்தே சொ. 242

இவ்வாறு பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் உயிர்எழுத்து, மெய்யெழுத்து, சார்பு எழுத்து என்பனவற்றைப்பற்றிய பல தெளிவான கருத்துகளை உட்கொண்டுள்ளதனை அறிகிறோம்.

எழுத்து இலக்கணம் உயிர் எழுத்தின் இலக்கணம், மெய் எழுத்தின் இலக்கணம் பற்றித் தொல்காப்பியனார் குறிப்பிடுவதை ஆசிரியர் பாலசுந்தரனார் தொகுத்துக் கூறியுள்ளார்.

## எழுத்து

நாதகாரியமாய் மக்களின் உந்தி முதலாத் தோன்றிக்கண்டத்தில் அழுத்தம் பெற்று, வாய் உறுப்புகள் உள் மூக்கு இவற்றின் முயற்சியால் பிறக்கும் செவிக்குப் புலனாகும் ஒலி வடிவமாகிய எழுத்து கண்ணுக்குப் புலனாகும் வரி வடிவமாகவும் எழுதப்பெறும் மாத்திரை என்னும் இசை அளவுக்கு உட்பட்டு ஒலிக்கும். சொல்லாகவோ, சொல் உறுப்பு ஆகவோ நின்று இருதிணை ஐம்பாற் பொருளையும் இவற்றின் பண்பு தொழில் என்பனவற்றையும் உணரவும் உணர்த்தவும் கருவியாக அமையும். தனித்து ஒலிப்பினும் மொழி இடைப்படுத்து ஒலிப்பினும் தன் இலக்கணத்தில் திரியாது

## உயிரெழுத்து

உந்தி முதலா முந்து வளி, கண்டத்தில் அழுத்தம்பெற வாய் உறுப்புகளின் ஒற்றுதல் தொழில்இன்றி இதழ்களின் கோணத்தான் மிடற்றுவளியான் தம் நிலை திரியாது உயிர்ப்பொடு கண்டத்தினின்றும் பிறந்து செவிப்புலனாகும்.

தனித்தும் மெய்யினை ஊர்ந்தும் சொல் உறுப்பாயும் அமைந்து பொருள் குறித்து நிற்கும். மெய்கள் உயிர் மெய்யாதற்குத் துணை நின்று அவற்றின் பிறப்பிடமே இடமாகத் தோன்றி வரும்.

தனித்து இசைக்குங்கால் குறுமையும் நெடுமையும் உயிர் மெய்க்குத் துணையாகுங்கால் வன்மையும் மென்மையும் இடைமையும் பெறும்.

தனித்தும் மெய்யினை ஊர்ந்தும் செய்யுட்கள் அலகுபெறும். உயிர் மெய்க்குத், துணையாகுங்கால் வரிவடிவில் தம் கூறுகளை நிறுத்தித் தம் வரிவடிவினை இழக்கும்.

உயிர் எழுத்துகள் யாவும் மொழி முதற்கண் வரும்.

செய்யுள் ஓசை கருதியும் சீர் அமைப்புக் கருதியும் ஓரோவழிப் பொருள் வேறுபாடு கருதியும் இசை, விளி, பண்டமாற்று முதலியன கருதியும் அளபெடை கொண்டு ஒலித்தலும் உண்டு.

உயிர் மெய்யாய் நிலையில் மொழியிறுதியில் யகரம் நீங்கிய ஏனைய உயிர்கள் வரும். யகரம் அளபெடைக்கண்ணே மொழி இறுதியில் வரும்.

## மெய் எழுத்து

தனித்து ஒலிக்கும் இயல்பு இன்றி, வாய் உறுப்புகளான் உருவாகி வடிவுற்று அநுகரண ஓசையால் ஒலி நிலை எய்தித் தடையுற்று வெடித்தும் அடைவுஉற்று நழுவியும், தடையின்றி உரசியும் நெஞ்சுவளி, மூக்குவளி, மிடற்றுவளி இவற்றான் பிறக்கும்.

உயிர், உயிர்மெய் எழுத்துகளின் பின் உயிர்இசை அலகின் துணையால் மெய் ஒலிக்கும். வாய் உறுப்புகளில் தொழில் நிகழ்ச்சியும் வளி இசையும் காரணமாக வன்மை, மென்மை, இடைமை என்ற ஒலித் தன்மைகளைப் பெறும். உயிரின் துணையால் உயிர்மெய்யாக்கத்தை நிகழ்த்தும்.

உயிரும் குற்றியலிகரமும், குற்றியலுகரமும் ஏற இடம் கொடுத்து அவ்வழித் தன் மாத்திரையை இழந்து அவற்றின் மாத்திரை அளவே ஒலிக்கும். மொழிக்கண் விட்டிசையாது தொடர்ந்து வரும். உடன் நிற்றற்கு ஏலாத மெய் இணைய வரும் வழி திரிந்து பிளவுபடாமல் தொடரும்.

உயிரோடு இணைந்தோ உயிரைச் சார்ந்தோ சொல்லாயும் சொல் உறுப்பாயும் விளைந்து பொருள் விளைக்கும்.

உயிரோடு உயிரை இயைக்க உடம்படு மெய்யாய் வரும்.

## உடம்படு மெய்

உயிர், மெய்யொடு மயங்கும்; உயிரோடு மயங்காது. எனவே உயிரோடு உயிரை இணைக்கப் பற்றாசு போன்ற மெய்யெழுத்துத் தேவைப்படுகிறது. அங்ஙனம் தேவைப்படும் எழுத்து உயிர் அழுத்தம் பெற்று பிறக்கும் மிடற்று வளியால் பிறப்பதாகவும் உயிரைப் போன்று மொழிக்கு முதலில் வரும் ஆற்றல் உடையதாகவும் இருத்தல் வேண்டும். அத்தகைய தகுதி உடைய மெய்கள் யகரமும் வகரமுமே. யகரத்தோடு ஒத்த ஒலி உடையன இ ஈ ஐ என்பன. எனவே இ ஈ ஐ வழி யகரமும் ஏனைய உயிர்வழி வகரமும் ஏ முன் இரண்டும் பெரும்பான்மையும் உடம்படு மெய்யாக வந்து ஈருயிர்களை இணைக்க உதவும்.

## மொழி முதல், கடை, இடை எழுத்துகள்

முதலும் சார்புமான 33 எழுத்துகளுள் 22 எழுத்துகள் மொழி முதலிலும் 24 எழுத்துகள் மொழி ஈற்றிலும் வரும்.

*மூன்று தலையிட்ட முப்பதிற்று எழுத்தின்*
*இரண்டு தலை யிட்ட முதலாகிருபஃது*

அறுநான்கு ஈற்றொடு நெறிநின்று இயலும்
எல்லா மொழியும் எ. 103

என்ற தொல்காப்பிய நூற்பாப் பகுதி மொழி முதல் கடையில் வரும் எழுத்துகளின் தொகையைக் குறிப்பிடும்.

'உயிர் பன்னிரண்டும் மொழி முதலாகி வரும்.

மெய் தனித்து மொழி முதலாகி வாராது. உயிரின் துணைக்கொண்டு உயிர்மெய் ஆகியே மொழிக்கு முதலில் வருமிடத்து கதநபம என்ற ஐந்து மெய்களும் பன்னிரண்டு உயிர்களோடும் சகரம், அ ஐ ஔ எஞ்சிய ஒன்பது உயிர்களொடும் வகரம், உ ஊ ஒ ஓ எஞ்சிய எட்டு உயிரோடும் ஞகரம், ஆ எ ஒ என்ற மூன்றோடும் யகரம் அகர உயிரோடும் மொழி முதற்கண் வரும். நுந்தை என்ற முறைப் பெயர் ஒன்றில் மட்டும் குற்றியலுகரம் மொழி முதற்கண் வரும். எனவே மொழி முதற்கண் வருவன உயிர் பன்னிரண்டு உயிர்மெய்யாக வரும் க ச ஞ த ந ப ம ய வ என்ற மெய் ஒன்பது குற்றியலுகரம் ஆகிய இருபத்திரண்டாம்.

மொழி ஈற்றில் வருவன உயிர் பன்னிரண்டு, ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்ற ஒற்று 11, குற்றியலுகரம் ஆக 24 எழுத்துகளாம்.

ஔகாரம் கௌ, வௌ என்ற இருசொற்களிலேயே மொழி ஈறாகவரும்.

யகரம் அளபெடைக்கண்ணேயே மொழி ஈறாக வரும்.
ஒகரம் நொ என்ற சொல்லிலேயே மொழி ஈறாக வரும். சகர
உகரத்தால் இறும் சொற்கள் உசு, முசு என்ற இரண்டே;
நகர ஒற்றான் இறும் சொற்கள் பொருந், வெரிந் என்ற
இரண்டே;
ஞகரத்தான் இறும் சொல் உரிஞ் என்ற ஒன்றே;
வகரத்தான் இறும் சொற்கள் அவ், இவ், உவ், தெவ் என்ற
நான்கே என அருகி வரும். சு பு ந ஞ் வ் என்ற ஈறுகளால்
அமையும் சொற்கள் பண்டே வரையறுக்கப்பட்டுள்ளன.

## மெய் மயக்கம்

சொற்களின் இடையில் மெய்கள் ஒன்றோடொன்று இணைந்து வரும் மெய் மயக்கம் ஒலி முறையான் இன்ன எழுத்திற்கு இன்ன எழுத்து நட்பெழுத்து இன்ன எழுத்து பகை எழுத்து என்று அறிதல் மாத்திரம் அன்றி அவற்றின் ஒலி திரிபுகளையும் அறிய உதவுவதாகும். உலக மக்களுள் பிறருக்காகவே வாழ்பவர் மிக அரியர். தமக்கே வாழ்பவர் சிலர். சமுதாய அமைப்பில் தமக்காகவும் பிறர்க்காகவும் வாழ்பவரே பலர். அம்முறையை இம்மெய்மயக்கத்திலும் காணலாம். ர, ழ என்ற மெய்களோடு கார்ப்பு காழ்ப்பு என்றாற்போல பிற மெய்கள் மயங்கும். கசதப என்ற மெய்களோடு அவற்றின் இன மெய்களே பக்கம், தச்சு, அத்தன், கப்பம் என்றாற்போல மயங்கும். ஏனைய பன்னிரண்டு மெய்களோடு அங்ஙனம், அங்கு, மஞ்ஞை, அஞ்சி என்றாற்போல தன்மெய்களும் பிறமெய்களும் மயங்கும்.

வல்லொற்றுகள் இரட்டுமிடத்தும் மெல்லொற்றொடு இணைந்து வரும் இடத்தும் இடையொற்றொடு இணைந்து வருமிடத்தும் மெல்லினத்துக்கும் இடையினத்துக்கும் இடையே வரும் இடத்தும் தத்தம் ஒலியில் சிறிது வேறுபட்டு ஒலித்தலைப் போன்ற இடங்களில் பகர ஒலித்திரிபினைக் காணலாம். தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் அம்மொழிச் சொற்களை இயல்பாக ஒலிக்குங்கால் வல்லொற்றை அடுத்தது, மெல்லொற்றை அடுத்தது; இடையொற்றை அடுத்தது; வல்லொற்று இரட்டியது என்றாற் போன்ற காரணங்களை அறியாமலேயே உள்வளி முயற்சியால் பல், நா முதலியன செயற்படும் போது ஒரே எழுத்தைத் தன்முன் பின் எழுத்தை நோக்கிச் சிறிது திரித்து ஒலிப்பதனைக் காணலாம். சொற்புணர்ச்சிக்குத் தேவைப்படும் அளவிலேயே எழுத்துகளின் பிறப்பினைப் பிறப்பியலில் உரைத்த தொல்காப்பியனார், இக்கருத்தினை "தத்தம் திரிபே சிறிய என்ப எ-88. என்ற நூற்பாவினைச் சிங்க நோக்காக அமைத்து உய்த்துணர வைத்துள்ளார். தமிழ் நூலார் 33 ஒலிகளையே அடிப்படையாகக் கொண்டு அவற்றில் 957 ஒலிகளை அடக்கி உள்ள செய்தியைப் பாலசுந்தரனார் விரித்துக் கூறியுள்ளார். ஒரு மொழி பேச்சுவழக்காக

உருப்பெற்று எழுத்துவடிவம் உற்று, தொடர்நிலை எய்தி, நூல் வடிவாக எழுதிப் பாதுகாக்கும் நிலையினை எய்தப் பல்லாயிரம் ஆண்டுகள் ஆகலாம். வளர்ந்து பிறந்த ஒரு மொழியினின்றும் கிளைக்கும் பிறிதொரு மொழி சில நூற்றாண்டுகளிலேயே உருப்பெற்று செம்மையுற இயலும்.

## இலக்கணத் தோற்றம்

ஒரு மொழி தொடர்ஆக்கம் பெற்று வளர்ந்து எதிர்காலத்தால் நிலைத்தற்கும் நிலைவுறுத்துதற்கும் ஏற்பத் தொடர்களையும் சொற்களையும் செம்மைசெய்து அழகும் சுவையும்பட அமைத்துக்கொள்ளும் பாட்டு முதலிய செய்யுள் வடிவம் எய்த மேலும் பல நூற்றாண்டுகளாகும். அங்ஙனம் வளர்ந்து இலக்கியச் செம்மையுற்ற நிலையில்தான் இலக்கணம் பற்றிய நினைவு முகிழ்த்தெழும். இலக்கணம் பல்லாண்டுகள் சான்றோர் பலரால் ஆராயப்பெற்று அம்மொழி பேசுவோர் ஏற்றுப்பயிலும் நிலையில்தான் வரையறை செய்யப்படும். அவ்வரையறைகள் செம்மையுற்ற பின்னரே சூத்திர யாப்பு முறையில் இலக்கண நூல்கள் இயற்றப் பெறும். எனவே மொழி தோன்றிப் பல்லாயிர ஆண்டுகள் கழிந்த பிற்பட்ட காலத்திலேயே அதன்கண் இலக்கண நூல்கள் வரையப்பெறும்.

இலக்கண நூல்கள் ஒருமொழியை வழங்கும் சான்றோர்கள் ஏற்கும் வகையில் உருபெற்றபின்னர், அவற்றின் வழியே சான்றோர்கள் இலக்கியங்களை ஆக்க அவற்றை மக்கள் பயிலத்தொடங்கிய பின்னர்தான் அம்மொழி பெரிதும் சிதைவுறாமல் செழிப்புறும்.

தமிழில் தொல்காப்பியம் என்ற எழுத்து, சொல், பொருள் என்ற முத்திறப் பாகுபாடுடைய நூல் தோன்றுவதன் முன்னரே இலக்கண நூல்கள் எழுத்து, சொல், பொருள் இவை பற்றித் தனித்தனியே விரிவாக யாக்கப் பெற்றிருத்தல் கூடும். சொற்படலப்புறநடை நூற்பாவில் தொல்காப்பியனார்,

> 'செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்
> மெய்பெறக் கிளந்த கிளவி யெல்லாம்
> பல்வேறு செய்தியின் நூல்நெறி பிழையாது
> சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்.' சொ. 463.

எனத் தமக்குமுன் பல்வேறு செய்திகளைக் குறிப்பிட்ட நூல்கள் இருந்த செய்தியைச் சுட்டுகிறார். அல்லதும் வழிநூல் வாய்பாடாக என்ப-எ. 88 என்மனார்; சொல்-1 நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே -எ. 7. கடிநிலையின்றே ஆசிரியர்க்க -எ. 389. நுனித்தரு புலவர் கூறிய நூலே. பொ. 666 எனத் தம் நூலில் பல இடங்களில் குறிப்பிடுவது கொண்டும் தொல்காப்பியத்துக்கு முற்பட்ட இலக்கண நூல்கள் பல தமிழில் தோன்றி இருந்தன என்பது பெறப்படும்.

இங்ஙனம் பல்லாயிர ஆண்டுக் காலஇடைவெளியில் பெரிதும் செப்பம் உற்று இலக்கிய இலக்கணம் வளம் செறிந்த நிலையிலும் தமிழ் மொழி தண்டமிழ், பைந்தமிழ், வண்டமிழ், நறுந்தமிழ், முத்தமிழ், கன்னித்தமிழ், செந்தமிழ் முதலிய அடைகளைப் பின்னுள்ளோர் புணர்த்து கூறுதற்குரிய தகுதி பெறுவதாயிற்று.

## தமிழ்க்குரிய அடையின்பொருள்

சொற்களும் சொற்றொடர்களும் செப்பமுற அமைந்த நிலையால் செந்தமிழ் எனவும் அச்செம்மை வலியப் புகுத்தப்பெறாமல் இயற்கையாகவே வழங்கப்பெற்ற நிலையால் நறுந்தமிழ் எனவும் பல ஆயிரம் சொற்களையும் சொற்றொடர்களையும் கொண்ட நிலையால் வண்டமிழ் எனவும் பல்லாயிர ஆண்டுகள் கழிந்த பின்னரும் பெரிதும் திரிபுறாமல் பண்டை வனப்பிற்றாகவே இருத்தலின் பைந்தமிழ் கன்னித் தமிழ் எனவும் பிறமொழிகள் போலச்சொல் பற்றிப் பால்பாகுபாடு செய்யாமல் பொருள் பற்றிப்பால் பாகுபாடு செய்து, கேட்டார்க்குத் திரிபு இன்றிப்பொருள் புலப்பாடு செய்தலின் தண்டமிழ் எனவும், இயல், இசை மெய்ப்பாடு என்ற முக்கூறுகளும் உடையவாய் ஒலித்தற்கு எளிமையும் கேட்பதற்கு இனிமையும் உடையனவாக வகுத்துக் கொண்ட ஓசை ஒலிகளையே எடுத்துக்கொண்டு உருவாகிச் செவிப்புலனாக வந்து இசை நிரப்பிச் சிந்தைக்குப் பொருளை அறிவிப்பதுடன் உள்ளத்தைத் தொட்டு மெய்ப்பாட்டு உணர்வையும் தோற்றிவைக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் உடைமையால் இயல் இசை மெய்ப்பாடு என்ற முத்திறமும் தோற்றுவிக்கும் அதன் சிறப்புத் தோற்ற முத்தமிழ் எனவும்

தமிழ் மொழி செவ்விய மதுரம் சேர்ந்த நற்றமிழ் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய கவிஞர் பலராலும் போற்றப்படுகிறது. சான்றோர் பேச்சு வழக்கினையும் செய்யுள் வழக்கினையும் உட்கொண்டு இலக்கணம் வரையப்பட்ட செய்தி,

ஒல்வழி அறிதல் வழக்கத்தான. - எ. 246
தக்கவழி அறிதல் வழக்கத்தான - எ. 270
வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே -பொ. 647
மரபுநிலை திரியின் பிறிது பிறிது ஆகும் -பொ. 646

முதலிய தொல்காப்பிய நூற்பா பகுதிகளால் வலியுறும்.

## தமிழ் முதல் மொழியே

இவ்வாறு தான் வழங்கப்பட்ட நிலத்தின் நன்மக்கள் முயற்சியால் தோன்றி வளர்ந்து செம்மையுற்று மரபு நிலை திரியாது மெலிவுற்று விளங்கும் தமிழ் மொழி மக்கள் பேசிய இயற்கை மொழியிலிருந்து செம்மைசெய்யப்பட்ட மொழியாகிற வடமொழியினின்றும் கிளைத்ததன்று. பொருள் பற்றிய பால் பாகுபாடுகளும் உயர்திணை அஃறிணை என்ற பொருள் பாகுபாடுகளும் புணர்ச்சிக் கண்படும் கருவி செய்கை என்பனவும் குறிஞ்சி வெட்சி முதலிய திணைப் பாகுபாடுகளும் வெண்பா ஆசிரியம் முதலிய பாப்பாகுபாடுகளும், போல்வனவும் தமிழ் மொழியின் நெடுங்கணக்கும் அதன் தனித்தன்மையை வெளிப்படுப்பன.

## தமிழில் வடமொழிச் சொற்கள்

'மொழிபெயர்த்து, அதர்ப்படயாத்தல் (பொருள். 658) என்ற தொல்காப்பியத் தொடர், மொழிபெயர்த்துப் பல செய்திகளைத் தமிழில் கொள்ளுதலையும் தமிழ்ச் சான்றோர் உடன்பட்ட செய்தியை விளக்குகிறது.

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே (பொருள். 397)

என்ற நூற்பா தமிழ்ச் செய்யுள்களில் வடசொற்களும் அருகி இடம் பெறுதற்கு வாய்ப்பு அளிக்கிறது. ஆனால் ஆரியச் சொற்களை அவற்றின் ஒலியை அப்படியே ஏற்றுக்கொண்டு

வரிவடிவில் உள்ள ஆரிய எழுத்துகளைத் தமிழ் எழுத்துகள் இடையே இணைத்துச் சொல்லாக்கம் செய்து பயன்படுத்துதலைத் தமிழ்ச் சான்றோர் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆரிய மொழியில் உள்ள சிறப்பெழுத்து களாகிய ரு, ரூ, லு, லூ, அம், அ: என்ற ஆறு உயிர்கள், கங, சஞ, டண, தந, பம என்ற ஐந்து வருக்கங்களிலும் இடையே உள்ள மும்மூன்று ஒற்றுகள் ஸ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்பவற்றைத் தமிழ் ஒலிக்கு ஏற்பத் திரித்து வடசொல்லுக்கும் பயன்படுத்துதல் வேண்டும் எனவும் ஆரியத்துக்கும் தமிழிற்கும் பொதுவாகிய எழுத்துகளால் அமைந்த ஆரியச் சொற்களைத் தமிழ் வரிவடிவிலேயே எழுதிப் பயன்படுத்துக எனவும் தொல்காப்பியர் சுருக்கமாகக் கூற, வீரசோழியம், நன்னூல் போல்வன அச்சிறப்பெழுத்துகளைத் தமிழ்மொழி அமைப் பிற்கேற்ப எவ்வெவ்வாறு பொது எழுத்துகளாகத் திரித்துக் கொள்ளவேண்டும். என்பதனை விளக்கிக் கூறுகின்றன. வடமொழிச் சொற்றொடர்களில் காணப்படும் அச்சொற்றொடர்களுக்குப் பயன்படுத்தும் விதி வீரசோழியம், முத்துவீரியம் முதலிய நூல்களில் இடம்பெறுகிறது. இவற்றை இலக்கியம் படைத்த சான்றோர் ஏற்றபெற்றிப் பயன்படுத்தியுள்ளனர். ஒரோ வழி வடமொழிச் சந்தியை விடுத்து வடசொற்களை இணைக்குமிடத்துத் தமிழ்ச்சந்தியையும் பின்பற்றியுள்ளனர்.

சந்திர உ+ உதயம் - சந்திரோதயம்-வடமொழிச்சந்தி
சந்திரவுதயம் - தமிழ்ச்சந்தி

இதர + இதரம் - இதரேதரம் - வடமொழிச்சந்தி
இதரவிதரம் - தமிழ்ச்சந்தி

நாக + ஈச்சறவன் - நாகேச்சறவன் - வடமொழிச்சந்தி
நாகவீச்சறவன் - தமிழ்ச்சந்தி

சாளரம் தோறும் தோன்றும் சந்திர உதயம் கண்டார் -
(இராமா. 493)

ஒரு தொடர் இடைவரூஉம் இதர விதரமும் -
(இலக். விளக். பொருள். 268)

நச்சுவார்க்கு இனியர் போலும் நாகவீச்சறவனாரே -
(தேவா-4808)

வடசொற்களைத் தமிழ்ச் சிறப்பெழுத்து ஐந்தாலும் திரித்துக் கொள்வதும் உண்டு.

யந்த்ரம்-எந்திரம்எந்திர ஊர்தி இடற்றுமின் என்றான் (சிந்தா. 234)
கொண்கணம் -கொங்கணம் கொங்கணக் கூத்தரும் நெடுங்கரு
நாடரும் -ங (சிலப். 26 - 106)
அமிர்தம் -அமிழ்தம் இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும்
-ழ (புறம். 182)
கல்பகம்- கற்பகம்கற்பகச் சோலைத் திருக்கடி தானர்
-ற. (திவ்.பிர. 3511)
ராமஹ - இராமன்இராமன் எனப்பெயர் ஈந்தனன் அன்றே
ன. (இராம 296)

பத்மநாபன் - பற்பநாபன் உயர்வற உயரும்
பெருந்திறலோன் (திவி. பிர-2861)
விஷ்ணு -வல்லன் எம்பிரான் விட்டுவே (திவ். பிர. - 2854)
கருடன் - விண்ணுறக் கலுழன்
மேல் விளங்கும் விண்டுவிண் -
(இராமா 5416)
யஷன் - இயக்கர் சிந்தினர் (இராமா 6093)
ராகவன் - புனைகழல் இராகவன்
பொற்புயத்தையோ (இராமா 5137)
லோபம் -உளப்படும் பிணிப்புஅறா உலோபம்
ஒன்றுமே (இராமா 363)

எனத் தமிழ் மரபு கெடாத வகையில் தமிழ்ச் சான்றோர்கள் ஆரியச் சொற்களைத் தமிழ் மரபிற்கு ஏற்ற வட சொற்களாக மாற்றிப் பயன்படுத்தியுள்ளனர்.

ஈச்வரக்ருஹம் - ஈச்சரம்
வீரஸ்தாநம் - வீரட்டானம்
தம்ஷ்ட்ரம் - தட்டம்
உபநயனம் -உவனியம்
ராக்ஷஸி -இராக்கதி

என்றாற்போலத் திரித்துக்கொள்வதனையும் காண்கிறோம்.

கோபாலனைக் கோவலன் எனவும் சத்யந்தரனைச் சச்சந்தன் எனவும் யக்ஞசத்ருவை வேள்விப்பகைவன் எனவும் மகராக்ஷனை மகரக்கண்ணன் எனவும் திரித்தும்

மொழிபெயர்த்தும் தமிழில் கொள்ளப்பட்ட வடமொழிப் பெயர்கள் நூற்றுக்கணக்கில் உள. ஆனால் "எந்த நிலையிலும் நமக்கு நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகள் போதவில்லை ஆதலின் வடமொழி எழுத்துகளையும் சேர்த்துக் கொண்டு செய்யுள் அமைக்க வேண்டும்" என்ற எண்ணம் தமிழ்ச் சான்றோர்கள் உள்ளத்தில் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதி வரை ஏற்படவில்லை.

இரட்சணிய யாத்திரிகம் என்ற கிறித்தவர் காப்பியத்திலேயே,
"மாண்டார் உயிரளிக்கும் மாமருந்தை வேரோடு
கீண்டெறிவார் இந்தக் கெடுதோஷிகள்என்பார்"
"ஜீவனை இழந்தஇச் சகத்திற்கு ஈறிலா
ஜீவன்வந்து இயையவும் அடைந்த நித்திய
ஜீவவா யிலுக்கோர் திறப்புண் டாகவும்
ஜீவனின் அதிபதி ஜீவன் விட்டனன்".

என்றாற்போல வடமொழி எழுத்துகளையும் பாடல்களில் இடைமிடைந்ததனைக் காண்கிறோம். 'அருட்பெருஞ்ஜோதி' என்று வரவதும் அது.

## வரிவடிவில் குறில் நெடில்

தமிழகம் பல்லவர் ஆட்சிக்கீழ் இருந்த காலத்தில் வடமொழியின் தாக்கம் மேம்பட்டிருந்த காலை எல்லாமொழிக்கும் தாய் வடமொழியே என்ற எண்ணம் நன்மக்களிடையேயும் பரவத் தொடங்கியதால் எதனையும் வடமொழியோடு ஒப்பிட்டுப் பார்த்து அதன்கண் காணப்படாத எச்செய்தியும் பிறமொழிகளில் இருத்தல் இயலாது என்ற உறுதியான முடிவை நன்மக்கள் உளங்கொளத் தொடங்கினர். தமிழ்நாட்டின் சோழநாட்டுப் பகுதியிலும் பாண்டிய நாட்டுப் பகுதியிலும் இடைக்காலத்தில் ஆண்ட மன்னர்கள் பலரும் ராசகேசரி, பரகேசரி, சடாவர்மன், மாறவர்மன், முதலிய பட்டங்களையும் ஆரிய மொழியில் அமைந்த பெயர்களையுமே பூண்டு வந்தனர் என்பதனை நோக்க வடமொழி இடைக்காலத்தில் பெற்ற தாக்கம் புலப்படும்.

அக்காலத்தில் வடமொழியில் இல்லாத எகர ஒகரங்கள் தமிழில் இருப்பதனைக் கண்டு, அவற்றின் ஒலிவடிவினை

உட்கொண்ட சொற்கள் பலவாக இருத்தலின் ஒலிவடிவில் ஏதும் திரிபு செய்ய இயலாது வரிவடிவில் மாத்திரம் ஏகார ஓகாரங்களின் வரிவடிவினையே எகர ஒகரங்களுக்கு மேற்புள்ளியோடு வழங்கிப் பயன்படுத்திய நிலை ஏற்பட்டிருக்கலாம். உயிர்மெய்யிலும் ஏகாரத்துக்குப் பயன்படுத்தும் இரட்டைக் கொம்பினை நெகிழ்ந்திருக்கலாம். குற்றியலிகரமும் குற்றியலுகரமும் புள்ளி பெறும் என்ற கருத்தில் அமைந்த 'இகர உகரத்து இயற்கையும் அற்றே' என்ற நூற்பா, எகர ஒகரத்து இயற்கையும் அற்றே என்ற திரிபினைப் பெற்றிருக்கலாம். வடமொழியில் குற்றியலிகரம் குற்றியலு கரம் என்பன இன்மையின் அவை தமிழிற்கே உரிய சிறப்பெழுத்தாய்ப் புள்ளி பெறும் என்ற செய்தி தேவையற்றது என்று நெகிழ்க்கப்பட்டிருக்கலாம்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் காலத்தில் குற்றியலுகரம் புள்ளி பெற்றிருந்ததாக அறியக் கூடவில்லை. 'குற்றியலுகரமும் அற்றென மொழிப' (எழுத்து. 105) என்ற நூற்பாவுரையுள் அவர் 'இம்மாட்டேறு ஒருபுடைக்கேறல் புள்ளி பெறாமையின்' என்று குறிப்பிட்டிருப்பது உளங்கொளத் தக்கது.

சோழர்கள் காலக் கல்வெட்டுகளில் கோப்பரகேசரி என்ற தொடர் கொப்பாகெசரி என்றே பொறிக்கப்பெற்றமை ஏகாரத்திற்கும் எகரத்திற்கும் ஒரே வரி வடிவைக் கொள்ளும் நிலை இடைக்காலத்து ஏற்பட்டதனை வலியுறுத்தும் சான்றாகும்.

மிக நுட்பமான எழுத்தமைப்பினை ஒலிவடிவில் அமைத்து அதற்கு வரிவடிவமும் கொடுத்ததனோடு, ஆரிய மொழியை வரிவடிவில் அமைப்பதற்குக் கிரந்த எழுத்து என்ற ஒரு புது வரிவடிவினையும் படைத்துக்கொண்ட தமிழ்ச் சான்றோர்கள் அ, ஆ, இ, ஈ, உ, ஊ என்பன போல எஏ, ஒஓ, இவற்றிற்கு வரிவடிவில் வேறுபாடு காட்ட இயலாது ஏகார ஓகாரங்களில் மேல் புள்ளியிட்டு எகர ஒகரங்களைப் படைத்துக் கொண்டனர் என்ற கொள்கை மனங்கொள்ள ஏலாததாகவே உள்ளது. ஆனால் இச்செய்தி நன்னூல் முதலிய பிற்பட்ட நூல்களாலும் தொல்காப்பிய எழுத்துப்படலம் பழைய உரைகளாலும் உறுதி பெற்ற பின்னர்ச் சுவடிகளில்

எகர ஏகார ஒகர ஓகார வேறுபாடுகள் இடம் நோக்கி உணரும் வகையிலேயே வரிவடிவில் வேறுபாடின்றி விடுவிக்கப்பட்டன என்றே கொள்ள வேண்டியவராக உள்ளோம்.

சொல்லும் பொருளும் பேதாபேதமாகக் கொள்ளப் படுதலின் சொல்லைச் சொல்லியஅளவில் பொருள் நெஞ்சிற்குப் புலனாவதும் பொருளைக் கண்டஅளவில் அதன் பெயர், பண்பு, தொழில் என்பன நெஞ்சத்திற்குப் புலனாவதும் உடன்தோன்றி நிகழ்கின்றன. மொழி என்பது கருத்துகளை உணர்வொடு வெளிப்படுத்தும் கருவியாதலின், மெய்ப்பாட்டுணர்வுகள் அச்சொற்களின் ஒலிகளுடனே கலந்து வெளிப்படும். இம்மெய்ப்பாட்டு உணர்வு காரணமாகவே அல்வழிப் புணர்ச்சியும் வேற்றுமைப் புணர்ச்சியும் வேறுபடுகின்றன என்று கூறி அவற்றைப் பாலசுந்தரனார் எடுத்துகாட்டுகளால் விளக்கியிருக்கிறார்.

சொற்புணர்ச்சி

சொற்கள், பல நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியுமாய்த் தொடர்ந்து உள்ளத்துப்பட்ட செய்திகளைத் திரிபின்றித் தெளிவாக விளக்கும் சொற்றொடர்களை ஆக்குகின்றன. சொல்லொடு சொல் புணருங்கால் பொருளமைதியும் பிறப்பும் காரணமாக இயல்பாகவும் மெய்பிறிதாதல் மிகுதல் குன்றல் என்ற மூவகைத் திரிபுகளை உற்றும் புணர்கின்றன. சொல்லும் சொல்லும் புணர்கின்றன என்று கூறினும் உண்மையில் புணர்பவை நிறுத்த சொல்லின் ஈற்றெழுத்தும் குறித்துவரு கிளவியின் முதலெழுத்துமே.

வாள் + படை - வாட்படை - ளகரத்தின் இடத்து டகரம் வந்தது மெய்பிறிதாதலாகும்.

நாய் + கால் - நாய்க்கால் - இடையே ககர ஒற்று மிகுந்தது.

மரம் + வேர் - மரவேர் - நிலைமொழி ஈற்று மகரம் கெட்டது.

இங்ஙனம் மெய்பிறிதாதல், மிகுதல், குன்றல் என்ற திரிபுகள் புணர்மொழிக்கண் நிகழ்வது நிலைமொழி வருமொழிகளை இணைத்து ஒலித்தற்கண் இயல்பாக ஏற்படும் ஒலிவேறுபாடு கருதியேயாம். இலக்கண நூலார் குறிப்பிட்டுள்ளனர் என்று அவர்களுடைய ஆணையைப்

பின்பற்றி நிகழ்த்துவது ஒன்று அன்று இது. எனவே மொழி பேச்சுவழக்கில் சான்றோர்மாட்டு வழங்குங்கால் நிகழும் ஒலி வேறுபாடுகளே இலக்கண நூலாரால் எடுத்து வரையறுக்கப் பட்டுள்ளன. இத்தகைய திரிபுகள் ஏற்படுதற்கு ஒலித்தல் எளிமையும் பொருளமைதியும் காரணமாதலை அரசஞ் சண்முகனார் தம் நுண்பொருட் சோலை என்ற கட்டுரையில் விளக்கியுள்ளார். அவருக்குப் பின்வந்த சான்றோர் பலரும் விளக்கியுள்ளனர். மெய்ப்பாட்டுணர்ச்சி காரணமாகவே அல்வழி வேற்றுமைப் புணர்ச்சிகள் ஏற்படுமாற்றைப் பாலசுந்தரனார் விளக்கியுள்ளார்.

எனவே, வழக்கும் செய்யுளுமாகிய மரபினை அடிப்படையாகக் கொண்டே தமிழில் இலக்கணம் அமைக்கப் பட்டுள்ளது என்ற செய்தியைத் தொல்காப்பியனார் நூன்மரபில் தொடங்கி மரபியலோடு தம் நூலினை நிறைவுறுத்தியுள்ள செய்தியான் உணரலாம்.

தமிழில் காலந்தோறும் பழையன சில கழிதலும் புதியன சில புகுதலும் நிகழ்கின்றன. அவை அடிப்படையான தமிழ் மரபினை ஒட்டியே தமிழில் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

தொல்காப்பியனார் காலத்தில் ஆசிரியம் வெண்பா கலி வஞ்சி மருட்பா பரிபாடல் என்பனவற்றுள் பிற்காலத்தில் ஆசிரியம் வெண்பா நீங்கலான ஏனைய பாடல்கள் நெகிழ்க்கப்பட்டதும் பாவினங்கள் பலவும் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் பாவினங்கள் அடிப்படையான தமிழ்மரபிற்கு ஏதம் நேராதவாற்றாலேயாம் என்று கொள்கிறோம்.

## இலக்கண மரபின் இன்றியமையாமை

ஒரு மொழிக்குப் பெருமை தருவன அதன் நெடுங்கணக்கு முறையும் அதன் சொற்களஞ்சியமும், இலக்கியங்களின் சிறப்பும் இலக்கணங்களின் வழக்கொடுபட்ட செறிவுமே எனலாம். ஒரு மொழியை இலக்கணமுறையால் செம்மை செய்வதன் நோக்கம் அம்மொழியை வழங்கும் மக்களின் சோர்வாலும் வட்டார வழக்குகளாலும் பிற மொழிகளின் தாக்கத்தாலும் அது சிதைந்துவிடாது இறந்த காலச்

சான்றோர்தம் கருத்துகளை நிகழ்காலத்தவர் திரிபின்றி உணர்ந்துகொள்வது போலவே நிகழ்காலச் சான்றோர்தம் கருத்துகளை எதிர்கால மக்கள் திரிபின்றி உணர்ந்து கொள்ளச் செய்யவேண்டும் என்பதாம். முந்நூறு ஆண்டு களுக்கு முற்பட்ட துளசிதாசர் அருளிய பாடல்களை இக்காலத்து இந்திமொழி பயில்வார் எளிதின் உணர்ந்து கொள்ள இயலவில்லை. அப்பாடல்களைத் திரிபின்றி விளங்கிக் கொள்ள அம்மொழியாளர் தனி இலக்கணங்களை வகுத்துள்ளனர். அதுபோலவே ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்நூல்களையும் இன்றுள்ளார் திரிபின்றி உணர்ந்துகொள்ளும் வகையில் இலக்கணச்செறிவு அமைந்துள்ளது.

## தனிநிலை தொடர்நிலைச் செய்யுள்

தமிழில் தனிநிலைச் செய்யுள்கள் பல. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்ற பண்டைய தொகுப்பு நூல்களில் உள்ளன. அக்காலத் தொடர்நிலைச் செய்யுள்கள் இன்று நமக்குக் கிட்டாமையின் அக்காலத்துத் தொடர்நிலைச் செய்யுள்கள் இயற்றப்பெறவில்லை என்று முடிவுசெய்தல் இயலாது. அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து முதலியவாகத் தொல்காப்பியம் கூறும் வனப்புகள் தொடர் நிலைச் செய்யுட்கு உரியனவே. இடைக்காலத்தவர் பாடல் களை ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்று நான்கு வகையாகப் பகுத்தனர். இவற்றுள் மொழிக்குப் பெருவளம் சேர்ப்பன வித்தாரக் கவிகளேயாகும். அவ் வித்தாரகவி, பல பாடல்கள் ஒருபொருள் மேல் தொடர்ந்து பாடப்பெறும் "தொடர்நிலைச் செய்யுள்" எனவும் "பல அடிகளான் ஒரே பாடலாக விரிவாகப் பாடப்படும் பத்துப்பாட்டு போன்ற தனிப்பா" எனவும் இருவகைப்படும். தொடர்நிலைச் செய்யுளும் பொருள் தொடர்நிலை எனவும் சொல் தொடர்நிலை என்வும் இருவகைப்படும். தொல்காப்பியனார்,

'முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி
பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே
யாற்றுப்படை மருங்கின் போற்றல் வேண்டும்' -(சொல். 962)

என அகலக்கவியைச் சொல்முடிவு கூறு முகத்தான் கூறுகிறார். புறத்திணைக்கண்,

தாவில் நல்லிசை (-பொருள். 91) என்ற நூற்பாவில் அகலக்கவி

இயற்றுதற்கு உரிய கருத்துகளாகிய துயிலெடைநிலை, கூத்தராற்றுப்படை, பாணாற்றுப்படை, பொருநராற்றுப் படை, விறலியாற்றுப்படை, பெருமங்கலம், மண்ணுமங்கலம், குடைநிழல்மரபு, வாண்மங்கலம், கடைக்கூட்டுநிலை, இருவரைவிடை, ஓம்படை என்பனவற்றை விதந்து கூறுகிறார். செய்யுளியலில்,

'அகன்று பொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்
இயன்று பொருள் முடியத் தந்தனர் உணர்த்தல்
மாட்டெனமொழிப பாட்டியல் வழக்கின்' - (பொருள். 522)

என்றதனால் பொருள் தொடர்நிலையும்,

உடனிலை மாட்டும் எச்சமும் நாட்ட மின்றி மொழியினும்
தொடர்நிலை பெறுமே -(பொருள். 523)

என்பதனால் சொல்தொடர்நிலைச் செய்யுளும் பெறப்படும்.

## இலக்கிய வகைகள்

இவ் வகலக்கவிகளைப் பிரபந்தங்கள் என்று பெயரிட்டுப் பின்னவர் வரைந்த பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப்பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், பிரபந்த மரபியல், இலக்கண விளக்கப் பாட்டியல், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் ஆகியவற்றின் பாட்டியல் பகுதி, பிரபந்த தீபிகை முதலியன விளக்கியுள்ளன.

இவையே அன்றித் தண்டியலங்காரம், மாறனலங்காரம் என்பனவற்றில் பெருங்காப்பியம் சிறுகாப்பியம் ஆகியவற்றின் இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன.

மும்மணிக்கோவை, மும்மணிமாலை, நான்மணிமாலை, இணைமணிமாலை, இரட்டைமணிமாலை முதலிய பிரபந் தங்கள் இன்ன பா, பாவினங்களால் பாடப்படவேண்டும்

என்பதும் உலா ஏழ்பருவமாதரின் வருணனை முதலியன கொண்டு நேரிசைக் கலிவெண்பாவால் யாக்கப்பட வேண்டும் என்பதும், தூது உயர்திணைப்பொருளையும் அஃறிணைப் பொருளையும் தூதாக விடுத்தலைக் கலிவெண்பாவினால் சொல்லப்பட வேண்டும் என்பதும் ஆண்பாற் பிள்ளைத்தமிழ் பருவங்கள் இவை, பெண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பருவங்கள் இவை, பிள்ளைத்தமிழ் பாடக் கொள்ளப்பட வேண்டிய பாவினம் இவை என்பதும் கலம்பக அமைப்பு இவ்வாறு, அதில் பயிலும் பாடல்கள் இன்னவை, அஃது இன்ன இன்னார்க்கு இத்தனை இத்தனைப் பாடல்களாக அமைதல் வேண்டும்; கலம்பகத்தின் உறுப்புகள் இவை என்பதும் போல நூற்றுக்கு மேற்பட்ட பிரபந்தங்களின் இலக்கணங்கள் இப்பாட்டியல் நூல்களில் காணப்படுகின்றன. இவற்றில் காணப்பெறாமல் புதுப்புதுப் பெயர் புனைந்து பாடப்பட்ட பிரபந்தங்களும் சில உள்ளன.

இவற்றுள் சிலவே இன்று காணக் கிடக்கின்றன. பல பிரபந்தங்களுக்கு இலக்கியங்கள் காணப்படுமாறில்லை. அவை யாவும் நாளடைவில் மறைந்துவிட்டன போலும்.

## இலக்கண நூல்கள்

இங்ஙனமே இலக்கண நூல்கள் பல நாளடைவில் மறைந்துவிட்ட செய்தி யாப்பருங்கலவிருத்திஉரை முதலியவற் றால் பெறப்படும்.

அஞ்சனம், அடிநூல், அமிர்தபதி, அரசசட்டம், அருங்கலநூல், அபிநந்தமாலை, அறிவுடைநம்பிசிந்தம், ஆசிரியம், ஆடைநூல், ஆடிதநூல், ஆனந்தஒத்து, இரண மாமஞ்சு, இன்மணியாரம், உலோகவிலாசனி, ஊசிமுறி, எழுத்துக்குறி வெண்பா, கடியநன்னியம், கணக்கியல், கரிப்போக்குவாசகம், கருடநூல், கருநாடகச்சந்தம், காலகேசி, குணகாங்கி, குறுவேட்டுவநூல், சங்கயாப்பு, சந்திர கோடிசந்தம், சயதேவம், சயந்தம், சாமுத்திரியம், சிந்தம், செயன்முறை, செயிற்றியம், சொகினம், சொற்கட்டு, ஞானசாரியம், தக்காணம், தத்துவதரிசனம், திணைநூல், திரையக்காணம், தும்பிப்பாட்டு, நக்கீரனார் அடிநூல்,

நல்லாறன் மொழிவரி, நாலடிநாற்பது, நிலத்துநூல், பத்துவிச்சை, பன்மணிமாலை, பன்னிருபடலம், பாசண்டம், பாட்டியல் மரபு, பாவைப்பாட்டு, பிங்கலகேசி, புராண சாகரம், பெரியபம்மம், பெருவனநல்லூர்ப் பாசண்டம், மந்திரநூல், மந்திரவாதம், மயூரத்திரிசந்தம், மருத்துவநூல், மாபிங்கலம், மார்க்கண்டேயனார் காஞ்சி, மாறநச்சை, முப்பெட்டுச் செய்யுள், மேடகச்சந்தம், வக்கிரகிரந்தம், வடுகச்சந்தம், வாசுதேவனார்சிந்தம் போன்ற பல நூல்கள் யாப்பருங்கலவிருத்தியில் சுட்டப்பட்டுள்ளன. இவற்றுள் சில இலக்கிய நூல்கள்; சில இலக்கண நூல்கள்; சில அறவியல் நூல்கள். சில நூல்களிலிருந்து ஓரிரண்டு பாடல்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. பல நூல்களின் பெயர்களே அறியப்படுகின்றன. கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டில் வழக்கிலிருந்த இந்நூல்கள் யாவும் காலவெள்ளத்தால் புறக்கணிக்கப்பட்டு மறைந்துவிட்டன.

## தமிழுக்கு நேர்ந்த வாட்டம்

சேர பாண்டிய சோழர்களான தமிழ் மன்னர்கள் ஆண்ட காலத்தில், தமிழ்மொழி மிக உயரிய நிலையில் வைத்துப் பேணப்பட்டது. அடுத்து வந்த காலத்தில் தமிழ் மொழிக்கு அத்தகைய பேணற்பாடு இல்லை. மன்னர்களைப் பாடிய புலவர்கள் தானத்தில், இறைவனைப் பாடிய அருளாளர்கள் அவதரித்தனர். அவர்கள் பாடிய பாடல் பல்லாயிரங்கள். அவற்றுள் சிலவே சுவடிகளில் பொறிக்கப்பட்டுப் பிற்காலத்தார் பயன்கொள்ளும் நிலையில் கிட்டியுள்ளன.

இடைக்காலச் சோழ பாண்டியர் காலத்தில் தமிழில் பெருங்காப்பியங்கள் தோன்றின. சிந்தாமணி, சூளாமணி, இராமாவதாரம், பெரியபுராணம், கந்தபுராணம், நம்பி திருவிளையாடற் புராணம் முதலியன சமயச் சார்புடைய அன்பரால் ஏட்டில் பொறித்துப் பாதுகாக்கப்பட்டன. ஆனால் இக்காலத்தில் அரசர்களைப்பற்றியும் கொடை வள்ளல்களைப்பற்றியும் பாடப்பட்ட பிரபந்தங்களில் சிலவும் தனிப்பாடல்கள் சிலவுமே கிட்டுகின்றன.

பிற்காலப் பாண்டியருள் அதிவீரராமன், வரதுங்க ராமன் போல்வார் பாடிய நைடதம், காசிகண்டம் போல்வன பேணப்பட்டன. வைணவ மடங்களால் நாலாயிரதிவ்வியப் பிரபந்த உரை பேணப்பட்டது. சைவமடங்களால் பழைய சைவசமய நூல்கள் பேணப்பட்டதோடு புதுப்புது நூல்களும் யாக்கப்பட்டன. கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டில் கற்றுவல்ல சான்றோர்கள் சில நூல்கள் யாத்துத் தமிழ்மொழியை வளப்படுத்தினரேனும் வேற்றுநாட்டார் ஆட்சியில் தமிழ் பொதுவாகப் பேணற்பாட்டினை இழந்தது. மடங்களில் வாழ்ந்த துறவியரும் அவரையடுத்துப் பயின்றவர் சிலருமே நல்ல புலமை பெற்றிருந்தனர். ஏனையார் சிறிதளவு தமிழ் பயின்ற அளவிலேயே தமக்குக் கிட்டிய அறிவினைக் கொண்டு புராணப்பிரசங்கங்கள் செய்து வாழ்நாளைக் கடத்தத் தொடங்கிவிட்டனர்

கி.பி. 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி, 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதி இவற்றில் சங்க இலக்கியமும் தொல்காப்பியமும் அடியோடு மறக்கப்பட்டு விட்டன. 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து ஒவ்வொன்றாக அவை அச்சில் கொணரப்பட்டன. சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தா மணி, பெருங்கதை, பத்துப்பாட்டு, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு என்பன டாக்டர். ஐயர் அவர்களால் செம்மையாகப் பதிப்பிக்கப் பட்டன. ஏனைய சூளாமணி, கலித்தொகை, தொல்காப்பிய உரைகள், இலக்கண விளக்கம், யாப்பருங்கல விருத்தி, காரிகை, தண்டியலங்காரம், போல்வன பலவும் பதிப்பிக்கப்பட்டன. நற்றிணையும் அகநானூறும் இக்காலத்தவர் எழுதிய உரையோடு வெளியிடப்பட்டன. எனினும் இந்நூற்றாண்டின் இடைக்காலம் வரை தமிழை ஆர்வத்தோடு கற்றவர் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது. இவ்வீழ்ச்சி இப்பொழுது ஏற்பட்டதன்று. பல நூற்றாண்டுகளாகவே தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது தமிழ் நூல்கள் பலவற்றையும் பாதுகாக்க வேண்டும் என்ற எழுச்சி ஏற்பட்டிருக்கிறது.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வரிவடிவம் தமிழிற்கு ஏற்பட்டமை அறியப்படுகிறது.

மோகன்சதாரோவில் காணப்படும் எழுத்துகள் தமிழோடு தொடர்புடைய எழுத்துகளே என்று அறிஞர் பலர் முடிவு செய்கின்றனர்.

## ஓலைச்சுவடிகள்

தமிழிலுள்ள புலங்களையும் நிலங்களையும் பண்டைக் காலத்தில் பனையோலைகளிலேயே பொறித்திருத்தல் வேண்டும். பனைமரம் தமிழ் நாட்டோடு நெடுங்காலத் தொடர்புடையது. தென்னை ஈழ நாட்டிலிருந்து தமிழகம் வந்தது என்ப. எனவே முற்றிய பனையோலைகளைப் பதப்படுத்தி ஒழுங்குப்படுத்தி, ஒட்டையிட்டுத் தொகுத்து, கம்பியை இடையே செலுத்தி, அதனொடு கயிற்றை இணைத்து மேலும் கீழும் பலகையிட்டு, கயிற்றால் இறுகப் பிணித்துக் கொண்டும் தேவைப்பட்டபோது கயிற்றை அவிழ்த்துத் தனித்தனியே பிரித்தும் பனையோலைகளில் எழுத்தாணி யால் செய்திகளைப் பொறித்த செய்தியே நம்மால் உணரப்படுகிறது.

மாணாக்கர்கள் தாம் பயிலவேண்டிய பாடங்களை ஆசிரியரிடம் கற்கும் முன்னரே ஏட்டுச்சுவடிகளில் எழுதிச் சுவடியை நன்கு கயிற்றால் பிணித்து, ஏடுகள் நெகிழாதவாறு பேணிக்கொண்டு, ஆசிரியரிடம் சென்றனர் என்பதும் ஆசிரியர் ஆணையிட்ட பின்னரே ஏடுகளை அவிழ்த்துப் பாடம் கேட்டனர் என்பதும்

"இரு என இருந்து ஏடு அவிழ் என அவிழ்த்துச்
சொல்லெனச் சொல்லிச் செல்லெனச் சென்று"

என்று மாணாக்கன் இயல்பு கூறும் பாடற்பகுதியால் புலனாகின்றன.

மாறன்அலங்காரம் மாணாக்கன் கற்ற கல்வியை மறவாமைக்கு உபாயம் கூறுமிடத்தில் அவன் மூல நூல்களை மனப்பாடம் செய்தலும் அங்ஙனம் மனப்பாடம் ஆதலுக்குப் பெரிதும் உதவும் வகையில் அவற்றைத் தானே ஏடுகளில் பொறித்தலும் செய்தல் வேண்டும் என்று குறிப்பிடுகிறது.

'கேட்டவை கேட்டவை நிரந்தரம் பாடம்
போற்றலின் ஏட்டில் தானே பொறித்தலும்' (மாறன். 55)

புலவர் பலரும் பாடிய பாடல்களை அவ்வப் பாடல்களுக்கு அமைந்த ஒலியோடு மனப்பாடம் செய்பவனாகியும் அந் நாற்கவிப்புலவோர் புதியனவாக இயற்றும் பாடல்களைத் தானே பட்டோலை பொறிப் பவனாகியும் மாணாக்கன் இருத்தல் வேண்டும் என்றும் மாறன் அலங்காரம் குறிப்பிடுகிறது.

'பாவினை ஒலிபெறப் படனம் செய்திடும்
நாவினன் ஆகி, நாற்கவிப் புலவோர்
புதுமொழி புணர்ப்புழிப் பொறிப்பவ னாகியும்' (மாறன். 56)

எனவே மாணாக்கன் நிலையிலிருப்பவன் தான்பாடம் கேட்க வேண்டிய நூலைத் தானே தன் கையால் சுவடியில் பொறித்துக் கொள்ளுதல் வேண்டும் என்றும் புலவர் எவரேனும் புதிய பாடல்களை யாக்க முற்பட்டவழி அவருக்குப் பட்டோலை பொறிக்கும் பணியிலும் மாணாக்கன் முற்பட வேண்டும் என்றும் கூறுவதன் வாயிலாக ஏட்டுச் சுவடிகளில் அழகு, அளவு, வடிவு, தெளிவு இவற்றுடன் விரைவாகப் பொறிப்பதற்கு மாணாக்கனாயிருந்த காலத்திலேயே ஒருவனுக்குப் பழக்கம் ஏற்பட வேண்டும் என்று நம் முன்னோர் கருதிய செய்தி புலப்படுகிறது.

## ஓலை ஆவணங்கள்

ஆவணங்களும் ஓலையிலேயே எழுதிப் பாதுகாக்கப்பட்டு வந்தன. நம்பியாரூரரை அந்தணர் வேடத்தில் வந்து ஓலை காட்டி ஆட்கொள்ளச் சிவபெருமான் தான் அவைமுன் காட்ட வைத்திருந்த அடிமைச் சீட்டான ஆளோலையை ஆரூரர் வலியப்பற்றிக் கீறியிட்டார் எனவும் கிழித்துவிட்டார் எனவும் சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார். அறுபது ஆண்டுகளுக்குக் குறையாது முற்பட்ட காலத்தில் அடிமைச் சீட்டாகப் பொறிக்கப்பட்ட ஓலை கிழிக்கப்பட்டது என்று கூறுவதனை நோக்கப் பனைஓலையின்றி அதனினும் மெல்லிதாய்ச் சுருட்டப்படத்தக்கதாய் ஒடியாமல் கிழிக்கப் படத்தக்கதான வேறுவித ஓலையும் அக்காலத்தில் பழக்கத்தில்

இருந்திருக்க வேண்டும் என்று கருதுகிறோம். கிழிக்கப்பட்டது படிஓலை என்று கூறி அவையோர் முன்னர்ச் சிவபெருமானாம் அந்தணர் காட்டிய பழையஓலை சுருண்டு மடிக்கப்பட்டிருக்க, அம்மடிப்பைப் பிரித்துக் கரணத்தான் ஓலையை வாசித்ததாக அறிகிறோம்.

> 'இருள்மறை மிடற்றோன் கையில் ஓலைகண்டு
> அவையோர் ஏவ
> அருள்பெறு கரணத் தானும் ஆவணம் தொழுது வாங்கிச்
> சுருள்பெறு சபையோர் கேட்ப வாசகம் செப்பு கின்றான்'
> (பெரிய. தடுத்தாட் -57)

என்ற பாடலை நோக்க அவ்வோலை தொன்மையாய்ச் சுருட்டி மடிக்கப்பட்டதாய், மடிப்பினைப் பிரித்தகாலையும் பழுதுபடாமல் தன்னிடத்திலுள்ள செய்தியைத் திரிபின்றி வாசிப்பதற்கு உரிய வாய்ப்பினதாக இருந்த செய்தியை அறிகிறோம். பனைஓலையே யன்றி இத்தகைய ஓலைகள் சிலவும் அக்காலத்துச் செய்திகளைப் பொறிக்கப்ப பயன்படுத்தப்பட்ட செய்தி புலனாகிறது.

கடற்காழியில் வாழ்ந்த கணநாதர் என்ற நாயனார் சிவபெருமானுடைய திருக்கோயிலில் எல்லையில் விளக்கு எரிப்போர் திருமுறை எழுதுவோர் வாசிப்போர் அனைவரையும் ஆதிரித்தார் எனத் திருத்தொண்டர் புராணம் கூறுவதிலிருந்து சிறந்த நூல்களைப் படியெடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்பதும் அவர்கள் சான்றோர்களால உண்டியும் உடையும் உறையுளும் நல்கி ஆதரிக்கப்பட்டனர் என்பதும் பெறப்படுகின்றன.

குவளைப்பூவின் காம்பினை ஓலையைக் கோத்து வைக்கும் இரும்புக் கம்பியாகக் கொண்டு எழுதுகோலினாலே எழுதப்பட்ட வரிகளை ஏற்றிழிவு படாதபடி, குவளைப்பூவின் இதழ்களைச் சுற்றி அதில் எழுதப்பட்ட செய்தியைக் கந்துக்கடன் வாசித்து அறிந்தான் என்று சிந்தாமணி (669) கூறுவது கொண்டு குவளைப்பூப் போன்ற நுட்பமான பொருள்களிலும் நுட்பமான எழுதுகோல் கொண்டு எழுதும் பழக்கம் ஒரோவழி இருந்திருக்கக்கூடும் என்று கருத வேண்டியவராக உள்ளோம்.

சீவகன் நூல்புடைத்தாற்போன்று இனிய வித்தகம் சேர் நுண்வரிகள் பல கொண்டு தன் உள்ளக்கருத்தினை ஓலை ஒன்றில் வரைந்து அதனையும் தன் மோதிரத்தையும் ஒரு தினைக்கதிரில் வைத்துக் கிளி ஒன்றன் வாயிலாகக் குணமாலையிடத்து அனுப்ப, அவள் அந்த ஓலையைத் தெளிவாக வாசித்து அதன்கண் இருந்த செய்திகளை உணர்ந்தாள் என்றும் சிந்தாமணி கூறுகிறது (1032, 1044). இந்த ஓலை எந்த மரத்தின் ஓலையோ - தினைக்கதிருக்குள் பிறர் அறியாதவாறு சுருட்டி வைக்கும் இயல்பிற்றாயும் அங்ஙனம் சுருட்டி வைத்ததனால் பழுதுபடாது விரித்துத் தடங்கலின்றி அதன்கண் பொறிக்கப்பட்ட வாசகங்களை வாசித்தறியும் வாய்ப்பினை நல்குவதாயும் அமைந்த ஓலை எம்மரத்தின் தொடர்புடையதோ என்று வியக்க வேண்டியவராயுள்ளோம். இப்பொழுதும் வடநாடுகளில் எழுத்தினைப் பொறிக்கப் பயன்படுத்தும் சீதாளம் என்ற ஓலை போலவும், பூர்சபத்திரம் என்ற மெல்லிய மரப்பட்டை போலவும் சில மெல்லிய ஓலைகளும் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டனபோலும்.

இங்ஙனமே கலுழவேகன் எழுதிய ஓலை (843) காந்தருவதத்தை சீவகனுக்கு முத்திரையிட்டுக் கொடுத்த ஓலை (1872) விதையத்தார் கோமானுக்குக் கட்டியங்காரன் அனுப்பிய ஓலை (2144) என்பன சிந்தாமணியில் கூறப்பட்டுள்ளன. அவை பனைஓலையில் எழுத்துகள் பொறிக்கப்பட்ட திருமுகமா, அன்றேல் வேறோர் ஓலையில் எழுதுகோலினால் மையைத் தோய்த்து எழுதப்பட்ட திருமுகமா என்பது தெளிவாக வில்லை. சூளாமணி சுவவனசடி என்ற மன்னன் போதன நகர மன்னனான பயாபதிக்கு எழுதியனுப்பிய ஓலை - மிக அழகியதாகவும் யானை முகத்தில் காணப்படும் செம்புள்ளி போன்ற எழுத்துகள் செப்பிலிருந்து மையைத் தோய்த்து வரையப்பட்டதாயும் இருந்தது என்று குறிப்பிடுகிறது. இதனை நோக்கப் பயன்படுத்தப்பட்ட ஏடு கருநிறத்ததாக இருக்க, அதன்கண் எழுதுகோலால் செந்நிற மசியைத் தோய்த்துத் திருமுகம் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருத இடம் ஏற்படுகிறது.

'நிகரிகந் தழகி தாகி நெறிவரும் படாத வேழம்
புகர்முகப் பொறிய தாகப் புகழ்ந்தசொல் அகத்துப் போகா
மகரவாய் மணிக்கண் செப்பின் மசிகலந்து எழுதப் பட்ட
பகரரும் பதங்கள் நோக்கிப் பயின்றுபின் வாசிக் கின்றான்'

(சூளாமணி - 513)

மாதவி முதிர்ந்த தாழையின் வெள்ளிய இதழில் அலந்தகம் ஆகிய செம்பஞ்சுக்குழம்பில், பித்திகை மொட்டினை ஆணியாகத் தோய்த்து அதனால் திருமுகம் எழுதி வசந்த மாலை வாயிலாகக் கோவலனுக்கு அனுப்பிய செய்தி சிலப்பதிகாரத்தில் (8-49-70) காணப்படுகிறது. இத் திருமுகம் வெண்ணிற ஓலையில் செந்நிறமசியினால் எழுதி அனுப்பப் பட்டது போலும்.

மாதவி கோவலனுக்குக் கோசிகமாணி வாயிலாக அனுப்பிய முத்திரையிட்ட ஓலை, பனை ஓலையா அன்றி வேறொன்றன் ஓலையா என்பது அறியக்கூடவில்லை. (சிலம்பு. 13: 75-76)

உதயணன் வாசவதத்தையின் குறுகிய நெற்றியிலேயே பூந்தாதுகளையும் சந்தனத்தையும் கொண்டு மானனிகைக்குப் பெரியதொரு காதற்கடிதம் எழுதிய செய்தியும் அதற்கு அவளும் மறுமொழியை வாசவதத்தை நெற்றியில் அவ்வண்ணமே எழுதியனுப்பிய செய்தியும் போல்வன பெருங்கதையுள் காணப்படுகின்றன. (IV : 13 : 63-125)

இலக்கியங்களில் கற்பனை கலந்து கூறப்படும் செய்திகள் பலவாக இருப்பினும் எழுதப்படும் கடிதங்களை ஓலை என்ற பெயராலேயே குறிப்பிடுதலின் எழுத்துகளைப் பொறிப்பதற்கு ஓலைகளே பயன்படுத்தப்பட்டன என்பதும் நமக்குப் பெரும்பாலும் உதவும் ஓலை பனையோலை என்பதும் பெறப்படும்.

கிராமசபைகளில் உறுப்பினர்களைத் தேர்ந்தெடு தற்கு அவர்கள் பெயர்களை ஓலைகளில் எழுதிக குடத்திலிட்டுப்பின் அவற்றை எடுத்த முடிவு செய்யும் நிகழ்ச்சியாகிய குடவோலை வாயிலாகத் தேர்ந்தெடுத்தல் என்ற செய்தி கல்வெட்டுகளில் காணப்படுகிறது.

'கயிறு பிணிக்குழிசி ஓலை கொண்மார்
பொறிகண்டு அழிக்கும் ஆவண மாக்களின்' (அகம். 77)

என்று இச்செய்தி அகநானூற்றில் ஓரிடத்து உவமமாக எடுத்தாளப்பட்டுள்ளது. எனவே வரிவடிவம் தோன்றிய காலத்திலிருந்து செய்திகளைப் பெரும்பாலும் ஓலையில் பொறிப்பதே நிகழ்ந்திருக்க வேண்டும் என்று கருதுகிறோம்

பலகாலம் இருக்கவேண்டிய செய்திகளைக் கல்லில் பொறிப்பதும் செப்பேட்டில் பொறிப்பதும் அறியப்படு கின்றன. அங்ஙனம் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளும் செப்பேடுகளும் நம் நாட்டு வரலாறு வரையப் பெரிதும் உதவுகின்றன. தேவாரப் பதிகங்கள் யாவும் ஒரு காலத்தில் செப்பேட்டில் வரையப்பட்டுத் தில்லையில் இருந்தன என்பதும் இப்பொழுது அச்செப்பேடுகளில் ஒன்றும் நமக்குக் கிட்டவில்லை என்பதும் வரலாற்று நூலார் கூறும் செய்திகளாகும். (பெருந்தொகை-1088)

## பதப்படுத்தப்படாத ஓலை ஆவணங்கள்

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதிவரை இராமநாதபுரம் முதலிய பகுதிகளில் குளங்கள், மீன் குத்தகைக்கு விடப்பட்ட செய்தி போன்ற நிகழ்ச்சிகள் சீவித் தூய்மைப்படுத்தி முறையாகக் கோத்துவைக்காத பனை ஓலைகளில் பொறிக்கப்பட்டனவாக அத்தகைய பனையோலைகள் பலபல கட்டுக்களாகக் காணப்படுகின்றன. அவை நாட்டின் வரலாற்றைக் கண்டறியப் பயன்படக்கூடும் என்று ஆராயப்படுகின்றன.

## இலக்கியச் சுவடிகள்

மாணாக்கர்கள் தாம் பயிலும் நூல்களைப் படியெடுத் துக்கொள்ளவும் புதிய நூல்களைப் படியெடுக்கவும் பிறர் சொல்லத் தாம் எழுதவும் முற்றியனவும் அகல மானவையும் ஒரே அளவு உடையனவையும் ஆகிய பனைஓலைகளைச் செப்பம் செய்து, அடுக்கி, அவற்றின்மேல் பெரிய கனத்தை வைத்து அவற்றைப் படிய வைத்து, அவற்றில் ஓட்டையிட்டு, அவ்வோட்டையில் இரும்புக் கம்பியைச் செருகி,

அக்கம்பியோடு இணைக்கப்பட்ட நூல் கயிற்றால் அவற்றைச் சிதைவுறாதவாறு பிணைத்துப் பயன்படுத்தி வந்தனர். இப்பனையோலைகளில் செய்திகள் பொறிக்கப்பட்டபின் இவை பூச்சிகளால் அரிக்கப்படாமைக்கும் விரைவில் பழுது படாமைக்கும் சமையலறையின்மேல் வைத்து வெளிவிளிம்பில் புகைபடச் செய்யப்பட்ட சுவடிகளையும் காண்கிறோம். இச்சுவடிகள் வெளியே கறுப்பாகக் காணப்படினும் உள்ளே பிரித்தால் இவற்றில் உள்ள பனைஓலைகள் விளிம்பில் கருநிறம் கொண்டு நடுவே பொன்நிறத்தில் இருப்பதனையும் இவை பெரும்பாலும் பூச்சிகளால் அரிக்கப்படாமல் இருப்பதனையும் காணலாம்.

## சுவடி படியெடுத்தல்

பெரும்பாலும் சுவடிகள் பயன்படுத்தப்பட்டு வந்தால் இருநூறு ஆண்டுகள் வரை பழுதுபடாமல் இருக்கும். சுவடிகளை வெறுமனே கட்டிய அளவில் வைத்திருந்தால் அவை விரைவில் பூச்சிகளால் அரிக்கப்படும். எவ்வளவு பேணி வைத்தாலும் ஓலைச் சுவடிகள் முந்நூறு ஆண்டுகளுக்கு மேல் பழுதறக் காணப்படமாட்டா. எனவே, பழைய சுவடிகள் பழுதுபடும் நிலைக்கு முன்னரே அவற்றை மீண்டும் படியெடுத்து வந்தனர் படி எடுப்பவர் யாவரும் கற்றுவல்ல புலவராயிருத்தல் இயலாது. சுவடிகளில் பொறிக்கப்பட்ட எழுத்துகள் யாவும் அச்செழுத்துப்போலத் தெளிவாக இருக்கும் என்று எதிர்பார்க்கவும் இயலாது. எல்லா வாய்ப்புகளும் மிக்கிருக்கும் இக்காலத்தும் வழுவழுப்பான வெள்ளைக் காகிதத்தில் நுட்பமான எழுதுகோலினால் எழுதும் பொழுதுகூடச் சோம்பல், விரைவு முதலிய காரணங்களால் பிறர் நன்கு விளங்கிக்கொள்ள முடியாதவகையில் கையெழுத்துகள் பல அமைந்திருப்பதனைக் காண்கிறோம். அங்ஙனமாக எல்லாச் சுவடிகளிலுள்ள எழுத்தும் தெளிவாகப் படியெடுப்போருக்குப் புலப்படும் என்று கருதுவதற்கில்லை.

சோதிடம் பற்றிய சில செய்திகள், மருத்துவம் பற்றிய சில செய்திகள், மருந்துகளைப் பயன்படுத்துதல் பற்றிய சில செய்திகள் போல்வனவே பண்டைச் சுவடிகளில்

உரைநடையில் வரையப் பெற்றிருக்கும். சான்றோர் இயற்றிய நூல்கள் பல மூலமும் உரையுமாக இருக்கும். நல்ல புலமை உடையவர்கள் மூலத்தைப் பார்த்து உரைநடைப்பகுதியில் விளங்காதனவற்றை இப்படித்தான் இருத்தல் வேண்டும் என்று ஊகித்து வரைந்துவிடுவர். குறைந்த கல்வியறிவுடையவர்கள் தாட்சணியத்திற்கோ ஊதியத்திற்கோ படியெடுக்கும் நிலையில் தம் பணியை விரைவில் செய்தல் வேண்டும் என்ற எண்ணத்தாலும் விரைந்து பணியை முடிக்காவிட்டால் தாம் அப்பணிக்குத் தகுதியற்றவர் என்று தமக்கு அப்பணியினை வழங்கியவர் கருதக்கூடும் என்ற எண்ணத்தாலும் பொருளை நோக்காது விளங்காத எழுத்துகளையும் சொற்களையும் தமக்குத் தோன்றியவாறே ஏட்டில் பொறித்துவிடுவர். பின் ஒரு காலத்தில் அந்தச் சுவடியை மூலச் சுவடிகளாகக் கொண்டு அதனைப் படியெடுக்க நேரின் பிழை பெரிதும் பல்கும்.

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த மகாவித்துவான் பிள்ளையவர்கள், விரைவாகப் பாடிக்கொண்டே போக அந்த விரைவுக்கு ஏற்ப அவர் பாடிய பாடல்கள் பட்டோலை செய்யப்பட்டனவாக அய்யரவர்கள் குறிப்பிடுகிறார். அவ்வளவு விரைவில் பொறிக்கப்பட்ட எழுத்துகள் எல்லாரும் பார்த்தவுடன் விளங்கிக்கொள்ளும் வகையில் தெளிவாக இருக்கும் என்று கருதமுடியாது. விரைவாக எழுதுவதற்கு இளஓலைகள் மிகவும் உதவியாக இருக்கும். அவற்றில் அழுத்தமாக எழுத்துகளைப் பொறிக்காமல் மேம்போக்காகப் பொறித்துக்கொண்டு சென்றுவிடலாம். ஆனால் ஆண்டுகள் ஆக ஆக அந்த ஓலைகளில் பொறிக்கப்பட்ட செய்திகளைத் தடவித் தடவிப் பார்த்து அறிந்து படியெடுப்பது மிகக் கடினமான செயலாக அமையும்.

## சுவடி எழுத்துமுறை

இந்த நூற்றாண்டின் தொடக்கத்ில்கூடக் காசிவாசி செந்திநாதய்யர் காகிதத்தில் வரைந்து முதல் மூன்று திருமுறைகள் ஏட்டுச் சுவடியில் எழுத்துகள் அமைக்கப் பட்டிருப்பன போலவே வரையப்பட்டிருத்தலைக் காண் கிறோம். பாடலடிகள் ஏட்டுச்சுவடிகளில் தனித்தனியே பிரித்துணரும் வகையில் பொறிக்கப்பட மாட்டா. சிக்கனம்

கருதி முழுப்பாடலும் ஒரே தொடராக மடக்கிப் பொறிக்கப்பட்டுப் பாடல் முடிந்தவுடன் அப்பாடலின் எண் குறிக்கப்பட்டிருக்கும். தமிழ்மொழிக்கே சிறப்பாக உள்ள எதுகையே அப்பாடலின் அடிகளைப் பகுத்துணர உதவி செய்யும். சுவடிகளில் மெய்யெழுத்துக்கள் புள்ளியிடப் பெறமாட்டா. ரகரமும், உயிர்மெய் ஆகாரம் ஓகாரம் இவற்றைக் குறிக்க இணைக்கப்படும் கால்களும் ஒன்று போலவே இருக்கும். எகர ஒகரங்களுக்குரிய ஒற்றைக் கொம்பே ஏகார ஓகாரங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கும். ஏட்டுச்சுவடியில் எழுதிப் பழகியவர்கள் இந்தச் செய்திகளைத் தாமேயும் பின்பற்றியதனால் ஏனைய ஏட்டுச் சுவடிகளை வாசிப்பதிலும் படியெடுப்பதிலும் அவர்களுக்கு அதிகத் தொல்லை ஏற்படவில்லை. ஏட்டுச்சுவடிகளையே வாசித்தும் படியெடுத்தும் வந்த செந்திநாதய்யர் காகிதத்திலும் ஏட்டுச்சுவடிகளில் வரைவதுபோலவே வரைந்துள்ளமையின், அக் காகிதங்களை வாசிப்பதன் கண் ஏட்டுச்சுவடியை, வாசிப்பதன்கண்உள்ள சிரமத்தின் பெரும்பாகம் உண்டாகிறது.

## இன்றைய அச்சுநிலை

அழகான காகிதங்களில் சந்தி பிரித்துத் தெளிவாக அடியடியாகப் பகுத்து எழுதி ஆங்காங்கு நிறுத்தக்குறிகள் இட்டு விரைவில் பொருள் புலப்படும் வகையில் பாடல்கள் அச்சிட்டு வழங்கப்படும் காலம் இது. அத்தகைய அச்சு நூல்களிலேயே பழகி எளிமையாகப் பாடங்களைப் படித்துச் சுவைக்கும் வாய்ப்புடைய நன்மக்கள் அச்சு நூல்களில் காணப்படும் நலன் எதுவும் இல்லாத ஏட்டுச்சுவடிகளைப் படித்து விரைவில் செய்திகள் உணர்ந்துகொள்ளமுடியும் என்பது அவ்வளவு எளிய செயலன்று.

## பண்டைய பதிப்பாசிரியர்

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, தொல்காப்பியம், தேவாரம் முதலிய சைவத் திருமுறைகள், வைணவ நூல்கள், பெருங்காப்பியங்கள், சிறுகாப்பியங்கள், பல இலக்கண நூல்கள், சிறு பிரபந்தங்கள் என்பன இந்நூற்றாண்டின்

தொடக்கத்துக்கு முன்னரே சான்றோர் பலராலும் சுவடிகளிலிருந்து பெயர்த்து அச்சில் கொண்டு வரப் பட்டுள்ளன. அங்ஙனம் பதிப்பித்த சான்றோர் எல்லோரும் சுவடிகளில் தாமே எழுதிய பழக்கமுடையவர்கள். சுவடிகளில் எவ்வெவ்வெழுத்து எவ்வெவ்வாறு எழுதப்பெறும் என்ப தனைத் தாமே எழுதிப் பழக்கப்பட்ட அப்பெருமக்களே ஏனைய சுவடிகளிலிருந்த நூல்களை எடுத்துப் பதிப்பித்தற்கண் தாம் பட்ட தொல்லைகளை விரிவாகக் கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கே இந்த ஏட்டுச்சுவடிகளை வாசித்தல் அவ்வளவு தொல்லை தருமானால் எழுத்தாணி எடுத்தறியாத நம்மனோர் அச்சுப்புத்தகங்களைப் பயில்வதிலேயே காலங்கழிதத நிலையில் ஏட்டுச் சுவடிகளை எடுத்துப் பிழையற வாசிப்பதும் அச்சுவடிகளில் உள்ள செய்திளைக் கசடற விளங்கிக் கொண்டு காகிதத்தில் படியெடுப்பதும் எளிய செயல்கள் அல்ல. அவற்றை செய்வதற்குத் தமிழினிடத்துக் கொண்டுள்ள ஆர்வமும் பொறுமையுமே நம் புலமையோடு இணைந்து துணைபுரிதல் வேண்டும்.

## பழஞ்சுவடிகளின் இன்றைய நிலை

நம்முடைய முன்னோர்கள் புதுச்சுவடிகளை மீண்டும் மீண்டும் படியெடுப்பதில் காலம் கழிக்க மாட்டார்கள். பழுதுபட்டுவிடுமோ என்ற நிலையில் உள்ள சுவடிகளையே படியெடுப்பார்கள். சுவடிகளின் ஓரங்கள் பூச்சிகள், கறையான் இவற்றிற்கு விரைவில் இரையாகிவிடும். நம் முன்னோர்கள் சுவடிகளில் இறுதிவரை எழுதும் பழக்கமுடையவர்கள். எனவே சுவடிகளின் ஓர் ஓரத்தில் சில ஏடுகள் பழுதுபட்டாலும் பாடல் அடிகள் சிதைவுறும். சுவடிகளின் இடப்புற ஓரம் பழுதுபட்டால் சுவடிகளிலுள்ள ஏடுகளுக்கு வரையப்பட்ட எண்ணிக்கை மறைந்துவிடும். 'சுவடிகள் நம் முன்னோர்கள் அரிதின் பாதுகாத்த செல்வம். அவற்றை நாமும் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும்' என்ற எண்ணம் மாத்திரம் உடையவர் சிலர். பிரித்துப் பார்த்தால்கூடச் சுவடிகளின் புனிதம் கெட்டுவிடும் என்ற எண்ணத்தில் ஆண்டிற்கு ஒருநாள் சரசுவதி பூசையன்று சுவடிகளுக்குப் பூ இடுவதனோடு தம் கடமை முடிந்து விட்டதாகக் கருதினர். அத்தகைய சிலர் மனம் விரிவடைந்து

தமக்கு எதுவும் புலனாகாத இச்சுவடிகள் நன்மக்களால் பயன்படுத்தப்பட்டுப் பொதுமக்களுக்கும் உதவட்டும் என்ற நல்லெண்ணத்தோடு அச்சுவடிகளை நல்கிய காலத்தில் சுவடிகளில் பெரும்பாலன பழுதுபட்டுப் பயன்படாமலே போன அவல நிலை பல இடங்களில் ஏற்பட்டுள்ளது.

கி.பி. 16ஆம் நூற்றாண்டில் சிவாக்கிர யோகிகளால் நிறுவப்பெற்ற சூரியனார் கோயில் ஆதீனத்தில் இருந்த பழைய தேவாரச் சுவடி ஒன்று எனக்கு ஒப்பு நோக்குதலுக்கு இரவலாகக் கிட்டியது. அதனை வழங்கிய அறிஞர் அச்சுவடி தம்மிடம் சில தினங்களுக்கு முன்னரே வந்ததாகவும் தாம் அதனைப் பிரித்துக்கூடப் பார்க்கவில்லை எனவும் ஒருகால் அது சிவாக்கிர யோகிகள் காலத்ததாகவும் இருக்கலாம் என்றும் கூறி எம்மிடம் கொடுத்தார். பழைய சுவடி கிடைத்த மகிழ்ச்சியில் எம் அலுவலகம் வந்து அதன் மேற்புறம் இணைந்திருந்த இரும்புத் தகட்டை எடுத்து அதனைப் பிரித்துப் பார்க்கத் தொடங்கியபோது ஏடுகள் யாவும் ஒட்டிக்கொண்டிருந்தன. அரிதின் முயன்று 10 அல்லது 20 ஏடுகள் கொண்ட பகுதிகளாக அதனைப் பிரித்தெடுத்து இடையில் இருந்து பத்து ஏடுகள் கொண்ட ஒரு பகுதியை அதில் இருக்கும் மண் முதலியன கரையலாம் என்ற எண்ணத்தில் தண்ணீரில் அலச ஏடுகள் தனித்தனியே பிரிந்துவிட்டன. எனினும் மேல்வரம்பு கீழ்வரம்புக்கு இடைப்பட்ட பகுதிகள் பலவும் அக்கறையான் மண்ணால் அரிக்கப்பட்டுப் போகவே அச்சுவடியைப் பத்திரமாகக் கட்டிச் சில நாள்களுக்குப்பின் உரியவரிடம் அதன் நிலைமையை எடுத்துக்கூறித் திரும்பிக் கொடுத்துவிட்டோம்.

இந்நிகழ்ச்சியால் நாம் அறியும் செய்தியாவது சுவடிகளில் பொறிப்பது சுவடிகளை எடுத்துப் படிப்பது என்ற நிலை இருந்த காலத்தில் சுவடிகளைக் கையாளுவதில் பழக்கப்பட்ட சான்றோர்கள் அவற்றைப் பேணி வைத்திருந் தனர். அந்தத் தலைமுறைக்குப்பின் சுவடிகள் முன்னோர் தேடி வைத்த செல்வம் என்ற எண்ணம் இருந்ததே ஒழிய அச்சுவடிகளின் உட்பொருள்களை உணர்ந்து அவற்றைப் பேணிவைக்கும் முறையை வழிவந்தவர் அறியவில்லை என்பதும் அறிய விரும்பவும் இல்லை என்பதுமாம்.

புறநானூற்றுச் சுவடிகள் பல கிட்டியும் சில பாடலடிகள் கிட்டவில்லை என்பதனையும் 268 பாடல்களுக்குமேல் புறநானூற்றின் பழைய உரை கிட்டவில்லை என்பதனையும் சிலப்பதிகாரத்து அடியார்க்கு நல்லார் உரை கானல்வரிக்கும் வழக்குரைகாதை தொட்டுப்பின் பகுதிகளுக்குக் கிட்டவில்லை என்பதனையும் பெருங்கதையின் முன்பகுதியும் பின் சில பகுதிகளும் கிட்டவில்லை என்பதனையும் பெருங்கதையின் முன்பகுதியும் பின் சில பகுதிகளும் கிட்டவில்லை என்பதனையும் குண்டலகேசி, வளையாபதி என்ற பிரசித்த மான காப்பியங்களும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் பொருளதிகாரத்து மெய்ப்பாட்டியல் உவமவியல் மரபியல்களுக்கு வரைந்த உரையும் குறுந்தொகை 20 பாடல்களுக்கு வரைந்த உரையும் பேராசிரியர் குறுந்தொகை 380 பாடல்களுக்கு வரைந்த உரையும் போல்வன இன்று புலப்படுமாறில்லை என்பதனையும் நோக்க ஏட்டுச் சுவடிகளைத் தக்காங்கு பேணிப் பாதுகாப்பதற்குத் தொடர்ந்து பல தலைமுறைகள் தமிழில் வல்ல சான்றோர்களாய் இருந்தாலொழிய ஏட்டுச்சுவடிகளைத் தொடர்ந்து பாதுகாத்துத் தேவையாயின் புதிய படிகள் எடுத்துப் பேணும் வாய்ப்பு எந்தக் குடும்பத்துக்கும் கிட்டாது ஆதலின் புலமை நலம் மிகும் நல்லூழ்பெறாத பிற்றோன்றல்களின் பேணற்பாடிழந்து சுவடிகள் தேவையற்ற பொருள்கள் என்று புறக்கணிக்கப்பட்டதால் பல நூற்செல்வங்களைத் தமிழ்த்தாய் இழந்து நிற்கும் அவல நிலையைக் காண்கிறோம்.

சரியாக விளங்கிக்கொள்ள இயலவில்லை என்று அய்யர் அவர்களால் குறிப்பிடப்பட்டுள்ள பரிபாடல் முதற்பாட்டாகிய ‘ஆயிரம் விரித்த’ என்ற திருமால் வாழ்த்தின் அராகப் பகுதி வேற்று ஏட்டுச்சுவடிகளின் துணையைக் கொண்டு இன்றுவரை பட்டாங்கு வெளிப்படுத்தும் வாய்ப்பினைப் பெறாததாகவே உள்ளது. வீரசோழிய உரையிலுள்ள எட்டாரைச்சக்கரத்தின் நிலையும் அதுவே. பெருங்கதையில் காணப்படும் ‘அட நாடு நடூஉ டடங்கண்டபுத்த’ போன்ற பல அடிகள் புதிய சுவடிகள் வாயிலாகச் செப்பம் பெறுமாறு நிகழ்ந்திலது. பதிற்றுப்பத்தின் முதற்பத்தும் இறுதிப்பத்தும் இன்றும் கிட்டாதனவாகவே உள்ளன. இவற்றிற்கெல்லாம் காரணம் தனியார் வசம் இருந்த ஏட்டுச்சுவடிகள்

பேணப்படாமல் வீணாக்கப்பட்டதேயாம். பேணற்படாமைக் குக் காரணம் அச்சுவடிகளின் உட்பொருள்களை அறியும் ஆற்றல் இன்மையேயாம். ஆனால் எல்லோரும் ஏட்டுச் சுவடிகளைப் புனிதப் பொருளாகக் கருதி ஏட்டின் தூள் கூடக் காலில் படக்கூடாது என்ற எண்ணங்கொண்டு, பதினெட்டாம் பெருக்கில் காவிரி வெள்ளத்தில் ஏட்டுச் சுவடிகளைக் கட்டிவிட அத்தகைய செயலால் இழக்கப்பட்ட சுவடிகள் எத்தனையோ? பிள்ளையார்ச்சதுர்த்தியன்று வழிபாட்டிற்காக வாங்கப்பெறும் மண்பிள்ளையார் பின்னப்படக் கூடாது. அதன் துகள்கூடக் கீழே விழுந்து நம் காலால் மிதிக்கப்படக்கூடாது என்ற உயர் எண்ணத்தால் அதனைக் குளத்திலோ ஆற்றிலோ கடல் அருகிலிருந்தால் கடலிலோ தூக்கி எறிந்துவிடுவது போல இந்த நூற்றாண்டின் இடைப்பகுதிவரை வாழ்ந்த சான்றோர் சிலர் ஏட்டுச் சுவடிகளைப் புனிதப் பொருளாகக் கருதி அவற்றுக்குத் தம்மால் குறைபாடு ஏதும் வாராதவகையில் அவற்றை ஆற்று வெள்ளத்திலிட்டு மனநிறைவு பெற்றனர்.

புதுச்சேரியில் அம்பலத்தாடையர் மடம் என்ற வீரசைவமடம் உள்ளது. இப்பொழுது அதன் தலைவராகத் தவத்திரு திருநாவுக்கரசு சுவாமிகள் உள்ளார். அம்மடத்தில் பாண்டியர் காலத்ததாகிய மணிவாசகப் பெருமானுடைய அருமையான ஓர் உலோகத் திருமேனி உள்ளது. மணிவாசகப்பெருமாள் சொல்ல அழகிய திருச்சிற்றம்பல முடையான் தம் அருமைத் திருக்கரத்தால் வரைந்த திருவாசக ஏடு, தில்லைப்பெருங்கோயிலின் சிவகங்கை என்ற திருக் குளத்தில் விடப்பட்டதாக அதனை இம்மடத்து முதல் தலைவர் எடுத்துப் பாதுகாத்துவைத்தார் எனவும் அவரால் பாதுகாத்து வைக்கப்பட்ட பெட்டியிலேயே அத்திருவாசக ஏடுகள் இன்றுகாறும் உள்ளன என்றும் கூறுகின்றனர். ஆவணி மூலத்தன்று அந்த ஏடு வைக்கப்பட்டுள்ள பெட்டியைத் திறந்து அதன்மேல் போர்த்தப்பட்டுள்ள பட்டினைக்கூட விலக்காமல் அவ்வேட்டிற்குத் தூப தீபங்கள் காட்டி உடனே பெட்டியை மூடிவிடுகின்றனர். மீண்டும் அடுத்த ஆண்டு அந் நன்னாளில்தான் அப்பெட்டி திறக்கப்படும். இப்படித் திருவாசக ஏடு ஒரு பெட்டியில் மூலமந்திரமாக உளது. அவ்வேடு மணிவாசகப்பெருமான் காலத்து ஏடாயின் அது

சிதைவுறாமல் இருக்குமாயின் அக்காலத்துச் சுவடிகளில் பொறிக்கப்பட்ட தமிழ் எழுத்துகளின் வரிவடிவம் எவ்வாறு இருந்திருக்கும் என்று அறிவதற்கெல்லாம் வாய்ப்புக் கிட்டலாம். அதற்கு வாய்ப்பு எதுவும் ஏற்படும் சூழ் நமக்கு இராது போலும்.

அய்யரவர்கள் திருவாடுதுறையாதீனத்திலிருந்து தமிழ் பயின்றவர். மகாவித்துவான் பிள்ளையவர்களிடம் பாடம் பயிலவும் அவருக்குப் பட்டோலை எழுதவும் வாய்ப்புப் பெற்றவர். அய்யரவர்கள் பதிப்பித்த பல அரிய நூல்கள் அவருக்கு இறவாப் புகழை நல்கியுள்ளன. அவர் ஒவ்வொரு நூலையும் பதிப்பிக்குபோதும் தமக்குச் சுவடிகள் கிட்டிய இடங்களைக் குறிப்பது வழக்கம். பெரும்பாலும் ஒவ்வொரு பதிப்பிற்கும் திருவாவடுதுறையாதீனச் சுவடி ஒன்று தமக்குக் கிட்டியதாகவே அவர் குறிப்பிட்டிருத்தலைக் காண்கிறோம். மகாவித்துவான் காலத்துக்குப்பின் அவர் தொகுத்து வைத்தவும் தாமே பொறித்துவைத்தவும் ஆன சுவடிகள் அனைத்தும் ஆதீனத்தின் உடைமையாயின. ஆதீனத்தின் நூல் நிலையத்தில் பல சுவடிகள் இருந்தன என்பதனையும் அச்சுப் புத்தகங்கள் சிலவும் தொகுத்து வைக்கப்பட்டிருந்தன என்பதனையும் அய்யர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

'தேவாரச் சுவடிகள் கிட்டின் அவற்றின் வாயிலாகச் சிறந்த பாடவேறுபாடுகள் கிட்டுதலும் கூடும். விடுபட்ட தேவாரப் பாடல்கள் அருகி எந்தச் சுவடியிலாவது இடம் பெற்றிருக்கக் கூடும்' என்ற வேணவாவினால் யாம் திருவாவடுதுறையாதீன நூல் நிலையத்துக்கு அவ்வாதீன சிவாசாரியரான சிவசிரீ சுவாமிநாத சிவாசாரியாரால் அழைத்துச் செல்லப்பட்டோம். அச் சிவாச்சாரியார் உதவி நூலகர். அவரே ஆண்டுக்கு ஒருமுறை அச்சுவடிகளை மண்ணெண்ணெயில் கட்டுக்கட்டாக நனைத்து அப்படியே எடுத்து வைப்பது உண்டு எனவும் சுவடிகளுக்கு ஏனைய பேணற்பாடு ஒன்றும் இன்று எனவும் நூற்றுக்குக் குறைவான சுவடிகளே இருக்கும் எனவும் அவற்றுள்ளும் இருப்பக்கமும் அரிக்கப்பட்டுப் பழுதுபட்டன சில எனவும் முன்கூட்டியே எம்மிடம் குறிப்பிட்டதனால் நூல்நிலையத்திற்குச் சென்று அச்சுவடிகளின் அவலநிலையைக் கண்டபோது யாம் வியப்பேதும் கொள்ளவில்லை. நூலகர் அங்குத் தேவாரச்

சுவடி எதுவும் இல்லை எனவும் அங்குள்ள சுவடிகளுக்குத் தாம் பட்டியல் எதுவும் தயாரித்து வைக்கவில்லை எனவும் கூறிவிட்டார். எனினும் அச்சுவடிகளை எடுத்துப் பார்த்தபோது முற்றாத பனை ஓலையில் எழுதப்பட்டிருந்த தேவாரக் குறைச்சுவடி ஒன்றும் இருபக்கமும் அரிக்கப்பட்டுப் பதிகத்தலைப்பு பக்க எண் இவற்றை இழந்த குறைச்சுவடி ஒன்றும் தேவார ஏடுகள் சிலவே தொகுத்து வைக்கப்பட்ட சுவடி ஒன்றும் எமக்குக் கிட்டினவாக, அவற்றை இருநாட்கள் அங்கேயே இருந்து பயன்படுத்திக்கொண்டு நூலகரிடம் திருப்பியளித்துவிட்டுத் தருமையாதீனம் வந்து சேர்ந்தோம்.

அங்குப் பேரறிஞர் இரமண சாத்திரியின் நூல்கள் யாவும் நூல்நிலையத்தை அணிசெய்யும் சிறப்பினைக் காணலாம். அங்கு நாற்பதுக்குக் குறைவான சுவடிகளே இருந்தன. அவையும் பேணற்பாடற்றிருந்தன. அவற்றுள் சில இலக்கண உரைகள். தேவாரக் குறைச்சுவடி ஒன்று சென்ற நூற்றாண்டில் பொறிக்கப்பட்டுள்ளதாய்த் தெளிவான எழுத்தினான் அமைந்து வாசிப்பதற்கு மிக எளிமையில் பயன்பட்டது. சுவடிகளைச் சுத்தம் செய்து பட்டியல் இட்டுக் கொடுத்து மீண்டோம். தமிழ்ச் சைவ மடங்களிலேயே தமிழ்ச் சுவடிகளின் நிலை எங்ஙனம் உள்ளது என்பதனை இந்நிகழ்ச்சிகள் புலப்படுத்தும். இந்நிகழ்ச்சிகள் எட்டு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தனவாகும்.

குத்தாலத்தை அடுத்த சிற்றூராகிய குணதலபாடியில் ஆசிரியர் ஒருவர் இல்லத்தில் பல பழைய நூல்களும் சுவடிகளும் இருப்பதனை உட்கொண்டு அங்குச் சென்றோம். சுவாமிநாதபண்டிதர் காசிவாசி செந்திநாதய்யர் என்பவர்களுக்குத் தொண்டராய் வாழ்ந்த பெரியவர் ஒருவர், அவர்கள் காலம் சென்றபின் அவர்கள் தொகுத்துவைத்திருந்த நூல்கள் சுவடிகள் இவற்றைச் சேகரித்து இரண்டு அலமாரிகளில் வைத்து நாளும் அவற்றிற்குப் பூவிட்டு வழிபட்டு வந்தவராவர். அவர் இருந்தவரை அவை அவரால் ஓரளவு பேணப்பட்டு வந்தன. அவர் காலம் சென்று ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு மேல் ஆன நிலையிலேயே அவர் தொகுத்து வைத்த சுவடிகளைக் காணும் வாய்ப்பு எமக்குக் கிட்டியது. புத்தகங்கள் யாவும் ஓர் அலமாரியில் அடைத்து வைக்கப்பட்டிருந்தன. ஏட்டுச் சுவடிகள் யாவும் பழைய

கோணிகளில் திணித்து வைக்கப்பட்டிருந்தன. எந்தச் சுவடிக்கும் இருபுறமும் பாதுகாவலுக்கு உதவும் கட்டைகள் இல்லை. அவைகள் வேற்றுச் செயல்களுக்குப் பயன்பட நீக்கப்பட்டுவிட்டன போலும். இரண்டே கோணிக்குள் சுவடிகள் எல்லாவற்றையும் திணித்து வைத்த நிலையில் பல ஏடுகள் வளைந்து நொறுங்கி இருந்தன. சில உடைந்து போயின. அச்சுவடித் தொகுப்புகளில் தேவாரச் சுவடிகளும் இருந்தன. கோணிகளில் அடைப்பதற்காகச் சுவடிகளின் ஏடுகள் பல கயிறுகளிலிருந்து உருவப்பட்டமையால் தனித்துக் கிடந்த ஏடுகளில் ஒரே அளவுடைய ஏடுகளைத் தனித்தனியே தொகுத்து அவற்றில் தேவார ஏடுகளைத் தனியே எடுத்து ஏனைய ஏடுகளோடு இணைத்து நோக்கிய அளவில் மூவர் தேவாரம் பற்றிய முழுக்கட்டொன்று இடையிடையே சில ஏடுகளை இழந்த நிலையில் தொகுக்கப்பட வாய்ப்பு ஏற்பட்டது. ஆசிரியப் பணி புரியும் பெயரர் கூடத் தம் பாட்டனார் தொகுத்துவைத்த நூல்களைப் பாதுகாப்பதனைக் கருதவில்லை. ஏட்டுச் சுவடிகளைப் பேணவேண்டிய அருமையையும் முறையையும் உணரவில்லை. இஃது இன்றைய தமிழகத்தில் யாண்டும் காணப்படுவது ஒன்றாக உள்ளது.

## பாடவேறுபாடுகள்

முன்னைய சான்றோர் பலர் நூல்களை மனப்படமாக வைத்திருந்தனர். அவர்கள் தம் நினைவிலிருந்து சொல்ல ஏட்டில் பொறிக்கப்பட்ட நூல்கள் பல. அவர்கள் தம் புலமையால் ஒரோவழி நினைவிலிருந்து விலகிய சீர்களையும் அளவுகளையும் பொருள் பொருத்தமுறத் தம் புலமையால் நிரப்பிக் கூறவே நூல்களில் பாடபேதம் என்ற பெயரால் சில வேறுபாடுகள் தோன்றிவிட்டன. மேலும் புலமைமிக்கவர் தாமே ஏடுகளில் பாடல்களைப் பொறிக்கும்போது மூல ஏடுகளின் ஒவ்வொரு சொல்லையும் பார்த்துப் படியெடுக்காமல் ஒரோர் அடியினை முழுமையாக நோக்கி மனதில் இருத்தி ஏட்டில் பொறிக்கத் தொடங்கியிருக்கலாம். அங்ஙனம் நோக்கிய அடிகளில் ஒரு சிறு பகுதி நினைவை அகன்றிருக்கலாம். அப்பகுதியை மீண்டும் மூல ஏட்டை நோக்கி உணர்ந்து வரையாமல், தமக்குப் பொருள் விளங்கிய வாய்ப்பினை உட்கொண்டு சோம்பலால் அப்பகுதி இப்படித்தான் இருத்தல் வேண்டும் என்று ஊகித்தும்

எழுதலாம். இதுவும் பாடவேறு ஏற்படுவதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்துவிட்டது. குறையறிவுடையவர்கள் மூல ஏட்டைப் படியெடுத்த காலத்துச் சில எழுத்துகளை உள்ளவாறு விளங்கிக்கொள்ள இயலாமல் தம் மனம் போன போக்கில் எழுதி விடுவதும் உண்டு. அங்ஙனம் எழுதப்படுவனவற்றைப் பாடபேதமாகக் கொள்ளாமல் பிழை என்று களைந்துவிடல் வேண்டும்.

பாடவேறுபாடு யாது? பிழை யாது? என்று பகுத்துணர்தலும் சான்றோரிடையும் இயலாததொரு செய்தியாக உள்ளது. பெருங்கதையைப் பதிப்பித்த அய்யரவர்கள் தாம் பதிப்பித்த பெருங்கதைநூலில் காணப்படாமல் ஏனைய நூல் உரைகளில் காணப்பட்ட பகுதிகளை எல்லாம் அந்நூல் முகவுரையில் தொகுத்துக் கூறியுள்ளார். அங்ஙனம் தொகுத்துக் கூறியுள்ள பெருங்கதைப்பகுதிகளில் வீரசோழியத்தில் காணப்படும் பகுதிகளும் இடம் பெறுகின்றன. வீரசோழியப் பதிப்பில் காணப்படும் அப்பகுதிகள் பிழை மலிந்து பொருள் புலப்பாடு அற்று இருக்கவும் வீரசோழியத்தினுள்ளனவாக அய்யரவர்கள் குறிப்பிட்டுள்ள அடிகள் தெளிவான பொருட் புலப்பாடு உடையனவாக இருத்தலைக் காண்கிறோம்.

வீரசோழியப் பாடல்கள் பல அறிஞர் மு. இராகவ அய்யங்கார் தொகுத்துள்ள பெருந்தொகையில் இடம் பெறுகின்றன. வீரசோழியப் பதிப்பில் காணப்படும் பிழைகள் பலவும் பெருந்தொகைப் பதிப்பில் பிழை களைந்து குறிப்பிட்டுள்ளன. இவற்றை நோக்கக் கற்றுவல்லாரிடையேயும் பிழைகளைக் களைந்து பாடவேறுபாடுகளை மாத்திரம் கொள்ளும் செயல் எளிமையில் நிகழக் கூடியதொன்றன்று என்பதனை உணர்கிறோம்.

சுவடிகளில் எழுதிப் பழகியவர்கள் பதிப்பித்த நூல்களிலேயே பல சிக்கல்கள் இருக்குமாயின் சுவடிகளை வாசிப்பதற்குக் கற்றுக்கொண்டு அவற்றைக் காகிதங்களில் படியெடுத்துப் பதிப்பிக்கத் தொடங்கும் இக்காலத்தாருக்குச் சுவடிகளிலுள்ள பிழைகள் எவை? பாடவேறுபாடுகள் எவை? என்பனவற்றைப் பகுத்து உணர்தலும் சிக்கலான செய்தியேயாகும். பல பதிப்புகளில் ஏடெழுதுவோர் நிகழ்த்தும்

பிழைகளும் பாடவேறுபாடுகளாகக் காணப்படுகின்றன. பொருள் பொருத்தம் சிறிதும் இல்லாதனவற்றைப் பாட வேறுபாடுகளாகக் காட்டுவதால் பயன் ஏதும் விளையாது. உரைநடைப் பகுதிகளில் பொருட்சிறப்புடைய பாடங் களையும் செய்யுட்பகுதிகளில் பொருட்பொலிவோடு அந்தச் செய்யுளின் யாப்பு அமைதிக்கு மிகவும் ஒத்திருக்கும் பாடங்களையும் மேற்கொண்டு தாம் மேற்கொண்ட பாடங்களோடு ஒப்பிடச் சிறிதளவு தகுதி குறைந்த பாடங்களைப் பாடவேறுபாடுகளாகத் தொகுத்துக் காட்டுதல் வேண்டும்.

## பதிப்பாசிரியர் தகுதி

பொதுவாகச் சுவடிகளிலிருந்து நூல்களைப் பதிப்பிக்கக் கருதுவோருக்கு அச்சுவடி எந்தத் துறைபற்றியதோ அந்தத் துறை பற்றிய பல நூல்களையும் பயின்ற நிறைஅறிவு இன்றியமையாதது. அத்துறை பற்றிய முன்னறிவு ஏதும் இன்றி ஒருதுறை பற்றிய சுவடியைப் பதிப்பித்தல் அதனைப் பயில முற்படுவோருக்கு எதிர்பார்த்த பயனைத்தராது போவதுடன் திரிபுணர்ச்சியையும் நல்கக் கூடும். சுவடிகளைப் பதிப்பிக் கும்போது இக்கால மக்களுக்கு உதவும் வகையில் சுவடிகளில் உள்ள செய்திகளைப் பதிப்பிப்பதோடு அமையாமல், விளக்கமான குறிப்புகளையும் இணைத்துப் பதிப்பித்தலே காலத்துக்கு ஏற்ற கடமையாகும்.

## முடிவுரை

சுவடிகளின் இன்றியமையாமை பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ள இக்காலத்தில் ஆங்காங்குத் தொகுத்து வைக்கப்பட்டுள்ள சுவடிகளின் பட்டியல்களும் தயாரிக்கப் பட்டுள்ளன. தனியாரிடம் பேணற்பாடின்றி உறங்கும் சுவடிகளையும் பெற்றுத் தொகுக்கும் பணிகளில் பல கல்வி நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன.

முன்னரே பல பதிப்புகள் வந்துள்ள நூல்களின் சுவடிகளும் பொறுப்போடு பேணப்படல் வேண்டும். முன்னைய பதிப்புகளைச் செம்மைப்படுத்தும் வகையில் சில அரிய பாடவேறுபாடுகளும் அச்சுவடிகளில்

காணப்படலாம். விடுபட்ட சில அடிகளை நிரப்புவதற்கும் அச்சுவடிகள் பயன்படலாம்.

தமிழ்மொழியின் ஆக்கத்திற்கு, முன்னைய சான்றோர் களின் தாம் அரிதின் முயன்று இயற்றினவாய்க் காலவெள் ளத்தால் மங்கிப் கிடப்பனவாய் உள்ள பல நூல்களின் சுவடிகளும் தொகுக்கப் பெற்று, நாளடைவில் அச்சில் வந்து, மக்களுக்குப் பயன்பட வேண்டுவது மிக இன்றியமை யாததாகும்.

இதுகாறும் கூறியவாற்றான் உலகப் படைப்பில் தோன்றியுள்ள உயிரினங்களில் மனிதனே மேம்பட்டவன் என்பதும் அவனிடமே மன அறிவு முழுமையாக நிரம்பி யுள்ளது என்பதும் உள்ளக் கருத்துக்களைத் தெள்ளிதின் விளக்கும் கருவியாகிய மொழி மக்களின் ஆக்கப்பொருள் என்பதும் அம்மொழி ஒலிவடிவில் மாத்திரம் இருந்த நிலையில் மக்களிடையே கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதற்குப் பயன்பட்டது எனவும், அதற்கு வரிவடிவம் ஏற்பட்டபின் முன்னவர் கருத்துகள் வரிவடிவில் எழுதி வைக்கப்பெறவே அவற்றைப் பின்னவரும் வாசித்து அறியும் வாய்ப்பு ஏற்பட்டது என்பதும் தமிழின் நெடுங்கணக்கு முறையின் சிறப்பு இன்னது என்பதும் இயற்கை மொழியாய்ப் பலருக்கும் தாய் மொழியாகிய தமிழின் நெடுங்கணக்கு, சீர்திருத்தம் செய்யப் பட்டுச் செயற்கை மொழியாய்க் கற்றாரிடைப் பொது மொழியாய் விளங்கும் வடமொழியை நோக்கி வகுத்துக் கொள்ளப்பட்டது அன்று என்பதும் தமிழிற்கே உரிய குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் இவற்றின் இயல்பு இன்ன என்பதும் உயிர், மெய், இவற்றின் நீட்டங்களும் குறுக்கங்களும் இன்ன என்பதும் தமிழ் மக்கள் சமசுகிருதத்தை வரைவதற்குத் தமக்கெனவே சிறப்பானவகையில் கிரந்த எழுத்தினைப் படைத்துக்கொண்ட நுண்ணறிவுடையவர் என்பதும் உரைநடையிலும் பேச்சுவழக்கிலும் வடமொழி எழுத்துகளாகிய ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்ற ஐந்தினையும் பயன்படுத்தினர் என்பதும் சிறப்பெழுத்தான் இயன்ற ஆரியச் சொற்களைச் செய்யுளில் பயன்படுத்தும் போது தமிழ் ஒலிக்கு ஏற்ப அவற்றைத் திரித்துத் தமிழ் எழுத்தாலேயே ஆக்கிக்கொண்டனர் என்பதும் எழுத்து, உயிர், மெய்,

உயிர்மெய் இவற்றின் இலக்கணங்கள் இன்ன என்பதும் தமிழில் மொழி முதல் இடை கடைகளில் வரும் எழுத்துகளுக்குச் சான்றோர் அமைத்த வரையறை இன்னது என்பதும் எகர ஏகாரங்களுக்கும் ஒகர ஓகாரங்களுக்கும் தமிழ் மக்கள் ஒரே வரிவடிவினைக்கொண்டு எகர ஒகரங்களை மேற்புள்ளி யிட்டுக் காட்டினர் என்ற கருத்து வடமொழி ஆக்கம் பெற்ற இடைக்காலத்திலேயே ஏற்பட்டிருத்தல் வேண்டும் என்பதும் தமிழில் தோன்றிச் சிலகாலம் நிலவிய பன்னூறு வழக்கு வீழ்ந்தன என்பதும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டுகள் செப்பேடுகள் இருப்பதுபோல ஏடுகளில் எழுதப்பட்ட வரிவடிவம் முன்னூறு ஆண்டு களுக்குமேல் பழுதுபடாமல் காக்கப்பட முடியாமையால் முன்னூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட வரிவடிவங்களே பெரும்பான்மையும் ஏடுகளில் காணப்படும் பழைய தமிழ்வரிவடிவம் என்பதும் ஏடுகளில் காணப்படும் வரிவடிவங்களுக்கும் இன்றைய அச்சுநூல் வரிவடிவங் களுக்கும் வேறுபாடு இன்ன என்பதும் ஏடு எழுதிப் பழகியவர்களே ஏட்டுச்சுவடிகளில் உள்ள நூல்களைப் பிழையற விரைவில் வாசித்துப் படியெடுத்தல் இயலும் என்பதும் பண்டைய மாணாக்கர்கள் ஏடுகளில் எழுதத் தொடக்கம் முதலே பயிற்றப்பட்டனர் என்பதும் அச்சுநூல்கள் வெளிவரவே அவற்றையே பயின்றார் ஏட்டுச் சுவடிகளின் அருமை உணராது அவை அழிந்து போதலுக்குக் காரணமாயினர் என்பதும் இக்காலத்து ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியால் எதிர்காலத்தில் இப்பொழுது நாட்டின் பல பகுதிகளிலும் தொகுத்து வைக்கப்பட்டுள்ள ஏட்டுச்சுவடிகளில் பெரும்பான்மை பேணப்படக்கூடும் என்பதும் அச்சுவடிவில் வந்த நூல்களும் அருகி ஒருசில இடங்களில் செம்மையான பாடங்களைக் கொள்ள ஏட்டுச்சுவடி உதவக்கூடும் என்பதும் ஏட்டுச்சுவடிகளைப் பதிப்பிக்க முற்படுபவர் அச்சுவடி எத்துறையைச் சார்ந்ததோ அத்துறையில் நிறைந்த புலமையுடையராய்த் தாம் பதிப்பிக்கும் நூல்களைக் கற்பாருக்குப் பயன்படும் குறிப்புரைகளுடன் பதிப்பித்தல் வேண்டும் என்பதும் ஒராற்றான் உணர்த்தப்பட்ட எனலாம்.